For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• மார்ச் 2023 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் •விலை : ரூ 60 •இதழ் 34



## நற்செய்தி பணியில் மிஷனெரிகள்


AMY CARMICHAEL


MARY THOMAS


FLORENCE SWAIZSON


SARAH TUCKER


EDITH P MORGAN


ANNE JANE ASKWITH


ELIZA CALDWELL


IDA SCUDDER


CLARINDA

# International
# WOMEN'S DAY

Happy Women's Day

HTTPS://CHRISTIANHISTORICALSOCIETY.IN/

Happy Women's Day

# ஆசிரியர் சுவடு

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உலகெங்கிலும் உள்ள மக்கள் மார்ச் 8ஆம் நாளை பெண்களுக்கான சிறப்பு நாளாகவும் சர்வதேச மகளிர் தினமானது சமூகத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும் பெண்கள் எவ்வளவு தூரம் வந்திருக்கிறார்கள் என்பதைக் கொண்டாடும் நாளாக மாறியுள்ளது.

சமீப காலமாக திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருந்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருச்சபை வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலகப் கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனிநபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒவ்வொரு மாதமும் மாத இதழினை வெளிக்கொண்டு வருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வரும் மார்ச் மாத தலைப்பாக "வட இந்திய பகுதியில் மிஷனெரிகள்" ஆற்றும் பணிகளை குறித்த ஆய்வுக் கட்டுரைகளை கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாரபரனின் பணியில்
*Manna Selvakumar*

G Pay

சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்

## கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

### மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

### வங்கி விபரம்

Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்


### ஆசிரியர்

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com


தொடர்புகொள்ள +91 91767 80001



# கறைபடா ஆசான்

## அண்ணன் ஸ்டான்லி பிரின்ஸ்

நிருபா ஜெசுவடியான்
மிஷன் இந்தியா, சென்னை

1970களில் சகோதரர் ஸ்டான்லி பிரின்ஸ் என்ற பெயரை கேட்டதுமே அன்றைய இளைஞர்கள் மெய்மறந்து விடுவார்கள். அந்நாட்களில் நடைபெறும் வாலிபர் முகாமின் சந்தியா வேளையில், பிரின்ஸ் அண்ணனின் செய்தியை கேட்டு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வதற்கும், முழு நேர ஊழியத்திற்கு என்றும் ஒப்புக்கொடுத்த இளைஞர்கள் ஏராளம். அவர்கள் இன்றும் இந்திய தேசத்தின் பல மாநிலங்களில் தேவனுக்காக வைராக்கியமாக ஊழியம் செய்து வருகிறார்கள்.

வெள்ளை சட்டை; வெள்ளை பேண்ட்; கெம்பீரமான குரல் ஆகியவற்றிற்கு சொந்தக்காரரான ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் கணக்கு ஆசிரியராக ஸ்ரீவில்லிபுத்தூர் சி. எம். எஸ் பள்ளியில் பணிபுரிந்து வந்தார். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும் மதிப்பைப்பெற்ற இவர், 1958 ஆம் ஆண்டு இப்பள்ளியின் ஆசிரியராக பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றார். மாணவர்கள், தலைமை ஆசிரியருக்குப் பயப்படுகிறார்களோ இல்லையோ, ஸ்டான்லி பிரின்ஸ் வாத்தியாருக்கு மிகவும் பயப்படுவார்கள். எட்டிக்காயைப் போல கசக்கும் கணித பாடத்தை மிகவும் எளிதாகவும், புரியும் படியாகவும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தார். எத்தனை முறை மாணவர்கள் கேட்டாலும் பொறுமையுடன் சொல்லிக் கொடுத்தார். மிகவும் கண்டிப்புடன் காணப்பட்டாலும் எல்லா மாணவர்களையும் நேசிக்கும் தன்மையுடையவர். ஒவ்வொரு மாணவர்களின் வாழ்விலும் அக்கறை கொண்டவர். படிப்பில் கஷ்டப்படும் மாணவர்களுக்கு பள்ளி நேரங்கள் தவிர்த்து மற்ற நேரங்களில் தனி வகுப்பு நடத்தி கணித பாடத்தை கற்றுக் கொடுத்தார். இதனால் பிரின்ஸ் அண்ணனின் வகுப்பு மாணவர்கள் அனைவரும் 100% தேர்ச்சி பெற்றதோடு முதல் மதிப்பெண் பெற்ற மாணவனும் அவர் வகுப்பில் இருந்தே அறியப்பட்டான். தன்னுடைய வகுப்பு மாணவன் முதல் மாணவனாக இருக்கிறான் என்று ஒருநாளும் அவர் பெருமைப்பட்டு தன்னைத்தானே மெச்சிக்கொண்டது கிடையாது. தன்னை கருவியாய் பயன்படுத்தும் தேவனை மட்டுமே மகிமைப்படுத்தினார்.

பிரின்ஸ் அண்ணனிடம் அன்பு கலந்த கண்டிப்பை நாம் காண முடியும். அவருடைய பார்வை, கண்டிப்பு என ஒவ்வொன்றும் விசேஷமானவை. தலைமை ஆசிரியர் தவறு செய்தால் அவரையும்கூட விட்டுவைக்க மாட்டார். ஆசிரியப் பணியில் மிகவும் ஒழுக்கம் உடையவர். அனேக ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக செயல்பட்டார். அப்பள்ளியில் ஆசிரியராக சேர்ந்த நாள் முதல் அங்கு பணியாற்றி வந்த ஃப்ரடி அவர்களும், பிரின்ஸ் அண்ணனும் நண்பர் சிறந்த நண்பர்களாக இருந்தார்கள். இவ்விருவரும் ஆவிக்குரிய வாழ்வில் மட்டுமல்லாது, தங்களுடைய எல்லா பணிகளிலும் மற்ற ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தனர். இருவரும் அப்பள்ளியில் ஜெபக்குழு ஒன்றை ஆரம்பித்து அவற்றை கிரமமாக நடத்தி வந்தனர். தங்களுடன் பணியாற்றிய கிறிஸ்தவ ஆசிரியர்களையும் மற்ற மாணவர்களையும் இதில் பங்கு கொள்ள உற்சாகப்படுத்தினர். மாணவர்களுக்கு நல்ல ஒழுக்கங்களையும் ஆவிக்குரிய

சத்தியத்தையும் கூறி நல்வழிப்படுத்தினார்கள். ஜெபக்குழுவிற்கு வரும் மாணவர்கள் படிப்பிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டும் என இருவரும் அதிகப் பிரயாசப்பட்டார்கள். யாரையும் கட்டாயப்படுத்தியோ, வற்புறுத்தியோ ஜெபக்குழுவிற்கு அழைத்ததில்லை. மாணவர்கள் தாங்கள் விருப்பப்பட்டு ஜெபக் குழுவில் கலந்துகொள்ள ஆரம்பித்தனர். அம்மாணவர்களின் வாழ்க்கையை பார்த்து அநேக புற மதத்தைச் சார்ந்த மாணவர்களும் ஜெபக்குழுவிற்கு வரத்தொடங்கினார்கள். பிரின்ஸ் அண்ணன் தான் போதிப்பது போலவே வாழ்ந்தும் காட்டினார். ஜெப குழுவில் பங்குபெறும் மாணவர்களிடம் மிஷனெரிகளை பற்றியும், ஊழியத்தை பற்றியும் அவ்வப்போது பகிர்ந்து கொண்டே இருந்தார். கிராம ஊழியம், தனிநபர் ஊழியம், மிஷனெரிகளுக்காக ஜெபம் பண்ணுவது என்று ஊழியங்களின் மேல் தாகம் கொண்டதோடு மட்டுமல்லாது மாணவர்களை அவற்றில் ஈடுபடவும் வைத்தார். பள்ளி மாணவர்களாக இருந்தாலும் பிரின்ஸ் அண்ணனின் வழி நடத்துதல் மாணவர்களை வெகுவாய் கவர்ந்தது. இளம் வயதிலேயே மாணவர்கள் தேசத்தின் மீது கரிசனை கொண்டவர்களாக காணப்பட்டனர். ஆசிரியருடன் சேர்ந்து இந்திய தேசத்தின் இரட்சிப்பிற்காய் முழங்காலில் நின்று ஜெபிக்க மாணவர்கள் கற்றுக் கொண்டனர். இதன் விளைவாக அந்த ஜெபக்குழுவில் பங்குபெற்ற மாணவர்கள் அனைவரும் இன்று தேசத்தின் உயர்ந்த பதவிகளிலும், உன்னதமான ஊழிய பணிகளிலும் இருந்து தேவனை மகிமைப்படுத்தி வருகிறார்கள். தேவனுக்காய் தன்னுடைய நேரங்களைச் செலவு பண்ணினவர்கள் ஒருபோதும் குறைவுபட்டு போவது இல்லை என்பதற்கு இவர்களே சாட்சிகள்.

**இதன் இரகசியம்:**

பிரின்ஸ் அண்ணன் ஒவ்வொரு நாளும் இயேசு கிறிஸ்துவிடம் தன் கைகளை, கால்களை, உள்ளத்தை மற்றும் எண்ணங்களை ஜெபத்திலேயே பிரதிஷ்டை செய்து புது மனிதனாக அந்த நாளை துவக்குவார். தன்னுடைய உறுப்புக்களால் எந்த விதத்திலும் ஆண்டவருக்கு விரோதமான பாவங்களை செய்து விடாதபடிக்கு அவற்றை கிறிஸ்துவிடம் அர்ப்பணிப்பது அவருடைய வழக்கம். இவற்றை இளம் சமுதாயத்திற்கும் கற்றுக் கொடுத்தார். **'பரிசுத்தமாகுதல் என்பது ஒருநாள் பணி அல்ல; அனுதினமும் நாம் செய்ய வேண்டிய பிரதான கடமை. கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட நிச்சயத்தோடு புதிய நாளை தொடங்குவோமானால் தேவன் விரும்பும் பரிசுத்தமான வாழ்க்கையை வாழ அவர் அருள் புரிவார். கிறிஸ்து தன்னை நிரப்பும்போது பழைய பிரின்ஸ் அவுட்; இன்றைக்கு உங்களோடு இருப்பது புது பிரின்ஸ்'** என்று அடிக்கடி கூறுவார்.

நண்பர்களுக்காகவும் சூழ்நிலைக்காகவும் தன்னுடைய நிலையிலிருந்து ஒருபோதும் பிரின்ஸ் அண்ணன் மாறியது இல்லை. ஆசிரியர்கள் வேலை நேரம் போக மற்ற நேரங்களில் அரட்டை அடிப்பது, கேலி செல்வது என்று இருந்த சமயங்களில், பிரின்ஸ் அண்ணன் அவற்றிற்கு விலகியே இருந்தார். உலகத்தால் கறைபடாத வாழ்க்கை வாழ்வதை தெரிந்தெடுத்தார். தண்ணீரை தன்னகத்தே கொள்ளாத தாமரை இலை போல உலகத்தின் அசுத்தங்கள் தன்னை அசூசிப்படுத்தாதவாறு காத்துக்கொண்டார். இவற்றைப் பார்த்த ஆசிரியர்கள் மாற்றம் பெற்றனர். தன்னுடைய பேச்சிலும் மூச்சிலும் கிறிஸ்துவின் அன்பை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சொல்லுவதையே பிரதானமாக எண்ணினார்.

எத்தனை வருடம் வாழ்ந்தாய் என்பது முக்கியமல்ல; எப்படி வாழ்ந்தாய் என்பதுதான் முக்கியம் என்று அடிக்கடி பிரின்ஸ் அண்ணன் கூறுவது வழக்கம். இவற்றை பேச்சளவில் மட்டுமல்லாது அர்த்தமுள்ள வாழ்வும் வாழ்ந்து காட்டினார். இன்று நம்முடைய வாழ்வு மற்றவர்களை கிறிஸ்துவின் பக்கம் ஈர்க்கிறதா அல்லது கிறிஸ்துவை விட்டு தூரம் போக காரணமாகிறதா? சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

சகோதரர் ஸ்டான்லி பிரின்ஸ் அவர்களைப் பற்றிய மேலும் பல அறிய தகவல்களை 'கறைபடா ஆசான்' என்ற புத்தகமாக வடிவமைத்துள்ளோம். வாசித்து பயனடையுங்கள்.


G Pay

சந்தா அனுப்ப

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

**G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....**

'வரலாற்றுச் சுவடுகள்' – மாத ஆய்விதழுக்கென்று G-pay(Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள், 91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம். நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு, அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

# மகளிர் தினம்

திரு ஜோசப், திருச்சி



பெண்கள் அனைவருக்கும் அகில உலக பெண்கள் தின வாழ்த்துக்கள்! இந்த நாளில் பெண்களின் முன்னேற்றத்திற்காக கடினமாக உழைத்த வீரப் பெண்மணிகள் இருவரைப்பற்றி பார்ப்போம்.

**ஆதரவற்ற ஆயிரம் பெண்மணிகளின் தாய் ஏமி கார்மைக்கேல்**

இந்தியாவிற்கு நற்செய்திப் பணியாற்ற வெளிநாட்டிலிருந்து வந்து இந்திய பெண்பிள்ளைகள் மீது மிகுந்த அன்புகொண்டு பெண்பிள்ளைகளை வளர்த்து கண்ணியமாக திருமணம் செய்து கொடுத்து குடும்பமாக வாழவைத்தவர் ஏமி கார்மைக்கேல் அம்மையார். தென் தமிழ்நாட்டிலும், பரவலாக இந்தியா முழுவதிலும் பெண்பிள்ளைகளை கோவில்களில் ஒப்படைத்து கடவுளுக்கு சேவை என்ற பெயரில் கோவில் நிர்வாகிகளும், ஊர் பெரிய மனிதர்களும் இப்பெண் பிள்ளைகளை தவறாக பயன்படுத்தி வந்ததையும், இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு தந்தை இல்லாமல் சமுதாயத்தில் படும்பாட்டைக் கண்டு மனதுருகி, இப்படிப்பட்ட பிள்ளைகளுக்காகவும், பெண்மணிகளுக்காகவும் விடுதி அமைத்து மறுவாழ்வு கொடுத்தார். தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்டார். ஏமி கார்மைக்கேலின் உயர்ந்த நோக்கத்திற்கு இடையூறாக வந்த தடைகளை கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள அன்பினால் பொறுமையோடே சகித்தார். இறுதிவரை போராடி ஆயிரக்கணக்கான பெண்பிள்ளைகளுக்கு வாழ்வளித்ததுடன் சமுதாய அவலமாகிய தேவதாசி முறையை முற்றிலுமாக ஒழித்தார்.





## புரட்சிப் பெண்மணி ஜோகன்னா செலஸ்டினா மீட்

(Johanna Celestina Mead)

புகழ்பெற்ற அருள்திரு. சார்லஸ் மீட் ஐயருக்கும், கிறிஸ்டோபர் ஹென்ரிச் ஹோர்ஸ்ட்- மரியா மக்தலேன ஹோர்ஸ் (Maria Magdalena Horst) தம்பதியரின் 5-வது மகளாகிய 17வயது செலஸ்டினா ஜோகன்னா ஹோஸ்ட்-ற்கும் 13-01-1819 அன்று தஞ்சாவூரில் திருமணம் நடைபெற்றது. புகழ்பெற்ற மிஷனெரி அருள்திரு. ஜாண் காஸ்பர் ஹோலாஃப் ஐயர் இத்திருமணத்தை நடத்தி வைத்தார். தரங்கம்பாடி, கடலூர் போன்ற பணித்தளங்களில் பணியாற்றிய இறைத் தொண்டர்கள் பலர் இத்திருமண ஆராதனையில் கலந்துகொண்டு கர்த்தரை மகிமைப்படுத்தினர். தாமதமின்றி தம்பதியர் தங்கள் பணித்தளமாகிய தென் திருவிதாங்கூராகிய நாகர்கோவிலுக்கு வந்து சேர்ந்தனர். ஜோகன்னா தஞ்சாவூரில் பிறந்து வளர்ந்ததால் தமிழ் நன்றாக அறிந்திருந்தார். பெண்களுடன் பழகுவதற்கும், நற்செய்தி அறிவிக்கவும் இது மிகவும் பயனுள்ளதாயிருந்தது.

பெண்கள் கல்வி கற்கத் தடை விதிக்கப்பட்டிருந்த திருவிதாங்கூர் பெண்களுக்கு கல்வி புகட்டுவதென தீர்மானம் செய்தார். ஆண்களுக்கான பள்ளியையும், பெண்களுக்கான (1820) பள்ளியையும் நிறுவினார். ஒருநாள் பள்ளிக்கு வந்த பெண்பிள்ளைகள் மறுநாள் பள்ளிக்கு வரவில்லை. எனவே பெண்களுக்கான உண்டுறை பள்ளியை 1820-ல் தொடங்கினார். பெண் கல்வியில் முதலிடம் வகிக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இதுவே மகத்தான ஆரம்பமாக அமைந்தது.

மேலாடை அணிய பெண்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இதனைப் போக்க மேலாடை வடிவமைத்து, அதைத் தைத்து முதலில் உண்டுறைப் பள்ளியில் பயிலும் பெண்பிள்ளைகளுக்கு அணிவித்தார். இந்தப்பிள்ளைகள் வெளியில் மேலாடை அணிந்து சென்றதைப் பார்த்த உயர்சாதி என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் இம்மேலாடைகளை கிழித்து எறிந்தனர். பெண்கள் தாக்குதலுக்கு உள்ளாயினர். இதற்கெல்லாம் ஜோகன்னா மீட் அஞ்சவில்லை. தேவாலயத்திற்கு கடவுளை ஆராதிக்க பெண்கள் வரும்போது மேலாடை அணிந்து வரவேண்டும் என்று வலியுறுத்தினார்.



நெய்யூர் பெண்பள்ளி



இவற்றைத் தொடர்ந்து பல போராட்டங்களும், தாக்குதல்களும், தேவாலயங்கள் மற்றும் பள்ளிகள் மீது நடத்தப்பட்டன. நெய்யூர், கொத்தனாவிளை, ஆற்றூர், மார்த்தாண்டம், கல்லங்குழி போன்ற ஊர்களில் கட்டப்பட்டிருந்த தேவாலயங்களும் பள்ளிக்கூடங்களும் எரிக்கப்பட்டன. ஆதிக்க சாதியினர் இதுவே தங்களுக்குக் கிடைத்த கடைசி வாய்ப்பாகக் கருதி செயல்பட்டனர். இவற்றால் பயப்படாத வீரப்பெண்மணி ஜோகன்னா கணவருக்கு பல நல் ஆலோசனைகள் கொடுத்து செயல்படுத்த வைத்தார். ஜோகன்னாவிற்கு சொந்த அம்மா போலவும், அக்கா போலவும் உடன் ஊழியராக திருமதி. மார்த்தா மால்ட் உடனிருந்து உழைத்தார். மேலாடைப் புரட்சியும், பெண் கல்வியும் வெற்றிபெற்று பெண்கள் தலை நிமிர்ந்து வாழ வழிசெய்தது.

பல இடர்பாடுகளுக்கிடையே பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டு சாதித்த வீரப் பெண்மணிகளை நினைத்து கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம்.

# அருள்திரு. எல்.பொன்னுசாமி

கவிஞர்.எல்.பொன்னுச்சாமி அவர்கள் 12.10.1896 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய சொந்த ஊர் உத்தமபாளையம். இவருக்கு மூன்று சகோதரர்களும், ஒரு சகோதரியும் உண்டு. ஒரு சகோதரர் ஏல்.ஜேக்கப் அவர்கள் உத்தமபாளையத்தில் விவசாயியாகவும், சபை தலைவராகவும் இருந்தார். மற்ற ஒரு சகோதரர் திரு.எல்.செல்வநாயகம் சி.எஸ்.ஐ பள்ளி 'புதுப்பட்டியில்' தலைமை ஆசிரியராகவும், கடைசி தம்பி எல்.சாமுவேல் அவர்கள் பசுமலை பள்ளியில் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். ஒரே சகோதரி காலஞ்சென்ற ஆபிரகாம் டி.சி.டி.ஒ.வின் தாயார்.

அருள்திரு.எல்.பொன்னுசாமி அவர்கள் திருமதி.பாக்கியம்மாளை திருமணம் செய்துகொண்டார். அவர்களுக்கு ஆண் பிள்ளைகள் ஐந்து பேரும், ஒரே பெண் பிள்ளையும் பெற்றெடுத்தார். இவருடைய பிள்ளைகளை நல்ல நிலைமையில் வளர்த்து, கர்த்தருடைய பாதையில் நடத்தியுள்ளார். இவருடைய தலைமுறை இன்றும் கர்த்தருக்கென்று சாட்சியுள்ள ஊழிய குடும்பங்களாக திகழ்கின்றார்கள்.

**கிறிஸ்தவ பள்ளியில் வேலை :**

அருள்திரு.எல்.பொன்னுசாமி ஐயர் அவர்கள் ஆரம்பகாலங்களில் உத்தமபாளைத்திலிருந்து வேலையின் நிமித்தமாக வத்தலக்குண்டு சி.எஸ்.ஐ.போர்டிங் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணி செய்தார். பின்நாட்களில் வத்தலக்குண்டு இவர்களுக்கு சொந்த ஊராக மாறியது.

**இறையியல் பணி:**

அருள்திரு.எல்.பொன்னுசாமி ஐயர் அவர்கள் இறையியல் முடித்து 26.02.1932 ஆம் ஆண்டு குருபட்டம் பெற்று இரண்டு ஆண்டுகள் பழனி திருச்சபையிலும் மற்றும் ஒட்டன்சத்திரம் திருச்சபையிலும் குருத்துவப்பணி செய்தார். அதன்பின்பு கம்பம் திருச்சபையிலும் மற்றும் கோகிலாபுரம், ஆனமலையான்பட்டி, சின்னமனூர், கூடலூர், உத்தமபாளையம், பகுதியிலும் சுமார் 20 ஆண்டுகளாக அவருடைய சொந்த பகுதிகளில் குருத்துவப்பணி செய்ய அழைக்கப்பட்டார். சுமார் 8 வருடமாக மேற்கு வட்டகை மன்றம் சேர்மனாக வத்தலக்குண்டில் தங்கி குருத்துவப்பணி செய்தார்.

**கவிதை சிந்தை களஞ்சியம்:**

கவிஞர்கள் கவிதைப் புத்தகத்தைத் தியானிக்கும்போது அவர்கள் பாடல்களுக்கு உந்துதலாக கருத்துக்கள் மட்டுமல்ல, சொற்களும், தொடர்களும் கூட நிறையக் கிடைக்கும். இவ்வகையில் நூற்றுப்பதின்மூன்றாம் சங்கீதத்தில் வரும் ஓர் அழகிய சொற்றொடரைத் தம் பாடல் ஒன்றின் துவக்க வரியாக்கியுள்ளார் அருட்பணி கவிஞர் போதகர். உன்னதங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமானமானவர் யார்? (சங்:113:5) என்ற வசனத்தை தழுவி எழுதியுள்ளார். கீர்த்தனை. 88 வது பாடல் **'உனக்கு நிகரானவர் யார்? - இந்த உலக முழுவதிலுமே'**

கிறிஸ்தவக் கீர்த்தனைகள் நூலின் திருத்தக் குழுவில் பணியாற்றியவர்களுள் மதுரை அமெரிக்கன் மிஷனைச் சேர்ந்த டாக்டர்.வாஷ்பர்ன், சாண்ட்லர், வெப், அருள்திரு.சந்தியாகு ஆகியோரைத் தொடர்ந்து அக்குழுவில் இணைந்து சிறப்பாக பணியாற்றினார். கவிஞர் அருள்திரு.எல்.பொன்னுசாமி அவர்கள் முந்திய தலைமுறைக் கிறிஸ்தவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.



**கீர்த்தனை பாடல்கள்:**

தென்னிந்திய திருச்சபையில் இன்று பாடக்கூடிய பாடலில் மிகவும் பிரபலமான பாடல் 'எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே' இன்று மனப்பாடமாக பாடும் பாடலாகும். அருள்திரு.எல்.பொன்னுசாமி ஐயர் அவர்கள் எழுதிய கீர்த்தனை பாடல்கள்: 88, 276, 352, 396, 397 ஆகிய ஐந்து பாடல்கள் கீர்த்தனையில் அடங்கியுள்ளது.

**குணநலன்கள்:**

தம் போதனையைச் சாதனையில் காண்பிப்பவர், சிநேகத்தன்மை, தெய்வபக்தி, ஜெபசிந்தை, நீதி நேர்மை, வேத ஆராய்ச்சி, அனைவரையும் சமமாக எண்ணுதல், சகிப்புத்தன்மை, பறந்த சிந்தை, இன்சொல் மொழிதல், தாழ்மை, அயராது உழைப்பு, கடமை தவறாமை, யாவரோடும் நெருங்கிப் பழகுதல், சிறந்த தமிழ் அறிஞர், நகைச்சுவை நிறைந்தவர், கல்விக் களஞ்சியம், இந்திய இசையில் ஆர்வமிக்கவர்.

**கடைசியாக பேசிய செய்தி:** 1.8.1965 ஆம் ஆண்டு திருவிருந்து ஆராதனையில் யாக்:5:13 வசனத்தின்படி **'ஜெபம் பண்ணக்கடவன்'** என்ற தலைப்பில் வத்தலக்குண்டு திருச்சபையில் பேசினார். தோத்திரம், பாவ அறிக்கை, விண்ணப்பம், மன்றாட்டு ஜெபம், தேவனோடு ஐக்கியம் ஆகிய தலைப்புகளில் அடிப்படையில் இறை வார்த்தையை பகிர்ந்துப் கொண்டார்.

கவிஞர்.எல்.பொன்னுசாமி அவர்கள் 18.08.1965 ஆம் ஆண்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய நல் அடக்கத்தில் மதுரை-முகவை திருமண்டிலத்தின் அருள்திரு.ஜே.எஸ்.பரஞ்ஜோதி, ஸ்டீபன்சன் மற்றும் பல இடங்களிலிருந்து வந்த போதகர்கள், தேவ ஊழியர்கள், உறவினர்கள், நண்பர்கள் அவர்கள் கலந்துகொண்டார்கள். வத்தலக்குண்டு பாடகர் குழு பாடல்பாடி இவருடைய சரீரத்தை வத்தலக்குண்டு சி.எஸ்.ஐ கல்லறைத் தோட்டத்தில் அருள்திரு.சந்தியாகு போதகர் அருகில் நல் அடக்கம் செய்யப்பட்டது. அவருடைய கல்லறையில் "Sacred to the ever cherished memory of The Rev.L.Ponnusamy called to heavenly service after 48 years of Loyal and truthful ministry as Headmaster, Presbyter, Local Council chairman and Permanent member of CLS Lyric Committee" என்று கல்வெட்டில் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் மரித்தாலும் இவருடைய கீர்த்தனை பாடல்கள் இன்றும் அனைத்து ஆலயங்களிலும் திருச்சபை மக்கள் பாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

**Rev.G.P.ராஜா**

# நற்செய்திப் பணியை உற்சாகமாய் செய்த உள்ளூர் மிஷனரிகள்



ஜா.ஜான் ஞானராஜ், கல்லிடைக்குறிச்சி

**தமிழ்நாட்டில் நற்செய்திப் பணியின் தொடக்கம்**

தூய.தோமாவின் காலத்திற்குப் பிறகு பதினைந்தாம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் நற்செய்திப் பணி நடைபெறவில்லை. தமிழர்களை கிறிஸ்தவ நற்செய்திக்குள் கொண்டு வர வேண்டும் என்ற பேராவல் 1532 இல் முதன்முதலாக கேரளாவைச் சேர்ந்த இராமநாயர் என்ற ஜான் டி குரூஸுக்கு ஏற்பட்டது.

**ஜான் டி குரூஸ் - ஓர் அறிமுகம்**

அரசியல் குழப்பம் நிறைந்த பதினாறாம் நூற்றாண்டில் தென் தமிழ்நாட்டு சிற்றரசர்களுக்கு அரேபியக் குதிரைகளை விற்பனை செய்து வந்த குதிரை வணிகரே ஜான் டி குரூஸ். 1498 இல் கேரளாவில் பிறந்த ஜான் டி குரூஸின் இயற்பெயர் இராம நாயர், இவர் கேரள சாமோரின் அரசரின் உறவினர். அக்காலத்தில் கேரளாவில் கொடுந்தமிழ் பேசப்பட்டு வந்தது. அது கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டு வந்தது.

**கேரள அரசரின் தூதுவராக ஜான் டி குரூஸ் போர்த்துக்கல் செல்லுதல்**

கேரள சாமோரின் அரசரின் தூதுவராக தமது 15 ஆம் வயதில் 1513 இல் போர்த்துக்கல் சென்ற இவர் போர்த்துக்கல் அரசர் மனுவேல் அவர்களை சந்தித்து, போர்த்துக்கல் - கேரளம் இடையேயான உறவை வளர்க்கும் நல்லெண்ண தூதுவராக தாம் வந்திருப்பதை தெரிவித்தார். அவருக்கு போர்த்துக்கல்லில் தங்க அனுமதி அளிக்கப்பட்டது. அவர் அங்கு தங்கியிருக்கும் போது போர்த்துக்கல் மொழியை எழுத படிக்க நன்கு கற்றுக்கொண்டார்.

மேலும் போர்த்துக்கல்லில் அவர் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார். இதை அறிந்த போர்த்துக்கல் அரசர் மனுவேல் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். ஜான் டி குரூஸ் எனும் கிறிஸ்தவ பெயரை அவருக்கு சூட்டினார். தமது அரண்மனையிலேயே அவரை வைத்துக்கொண்டார். மேலும் **'கிறிஸ்துவின் சேனா வீரர்'** என்ற பட்டத்தை அவருக்கு அரசர் கொடுத்தார். ஐந்து ஆண்டுகள் போர்த்துக்கல் நாட்டில் அரசரோடு அரச மாளிகையில் தங்கியிருந்தார். போர்த்துக்கல்லில் இருந்து 1519 ஜனவரி மாதம் கேரளா திரும்பிய பின் ஜான் டி குரூஸ் என்றே அவர் அழைக்கப்பட்டார் .

**மிளகு வணிகத்தில் இருந்து குதிரை வணிகராக மாறிய ஜான் டி குரூஸ்**

போர்த்துக்கல் அரசர் மனுவேல் உடன் இருந்த நெருங்கிய நட்புறவு காரணமாக போர்த்துக்கல் மற்றும் கேரளா இடையேயான



மிளகு போன்ற சிறப்பு பொருட்களை போர்த்துக்கல்லுக்கு ஏற்றுமதி செய்யும் பணியைச் சிறப்பாக இவர் செய்து வந்தார். ஒருமுறை இவரால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் சேதமடைந்ததால் பெரும் வணிக இழப்பை இவர் சந்தித்தார். போர்த்துக்கீசிய படைத்தளபதியின் ஆதரவைப் பெற்றிருந்ததால் ஜான் டி குரூஸ் தென் தமிழ்நாட்டின் மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரையோரங்களில் சிற்றரசர்களுக்கு குதிரைகளை விற்கும் குதிரை வணிகத்தை செய்து வந்தார்.

**மீனவர் மீது இவர் கொண்ட பரிதாபம்**

1532 ல் குதிரை வணிகத்திற்காக தூத்துக்குடிக்கு இவர் வந்தபோது மூர் இஸ்லாமியரால் மீனவ பரதவரின் காது அறுக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மூர் இஸ்லாமியர் மற்றும் மீனவ பரதவர் இடையே பெரும் கலவரம் ஏற்பட்டது. மீனவ இனமே அழிந்து போகும் நிலையை நோக்கி செல்வதை நேரில் கண்ட இவர் மீனவர் மேல் பரிதாபம் கொண்டார்.

**ஜான் டி குரூஸ் வகுத்த திட்டம்**

மீனவ பரதவர்களை கிறிஸ்தவ நற்செய்திக்குள் கொண்டு வந்து போர்த்துக்கீசிய படை மூலம் அவர்களை கொடுமையாக ஆதிக்கம் செலுத்தும் மூர் இஸ்லாமிய படையை விரட்டி அடிக்க வேண்டும் என்ற திட்டத்தை வகுத்தார். மீனவ தலைவர்களிடம் அவர்கள் **'கிறிஸ்தவர்களாக மாறுகிறபோது போர்த்துக்கீசிய படை மூலம் இஸ்லாமியர் விரட்டியடிக்கப்படுவார்கள், மீனவருக்கு போர்த்துக்கீசியர் பாதுகாப்பு வழங்குவார்கள்'** என்ற தமது திட்டத்தை எடுத்துக் கூறி அவர்களை சம்மதிக்க வைத்தார்.

**கிராமங்கள்தோறும் சென்று மீனவர்களை சந்தித்த மீனவ தலைவர்கள்**

ஜான் டி குரூஸ் அவர்களின் திட்டத்தை மீனவ தலைவர்களான பட்டங்கட்டியார்கள் ஒவ்வொரு மீனவ கிராமங்களுக்கும் சென்று மீனவ மக்களுக்கு எடுத்துக்கூறி கிறிஸ்தவர்களாக அவர்களை சம்மதிக்க வைத்தார்கள்.

ஜான் டி குரூஸ் வகுத்த திட்டத்தை முறியடிக்க மூர் இஸ்லாமியர் முன் வந்தனர். அக்காலத்தில் போர்த்துக்கீசிய படைத் தளபதியாக பேரோவாஸ் டி அமர் இருந்தார். கிறிஸ்தவராக மாற மீனவர் தயாராக இருந்த சூழலில் அதை தடுக்கும் நோக்கத்தில் 20 ஆயிரம் ரூபாய் பண முடிப்பையும் எட்டு அழகிய முத்துக்களையும் எடுத்துக்கொண்டு மூர் இஸ்லாமிய தூதுக்குழு படைத்தளபதி பேரோவாஸ் டி அமரைச் சந்திக்க வந்தது. ஆனால் அவர்களை சந்திக்க படைத்தளபதி மறுத்தார். அதே நேரத்தில் தம்மிடம் ஆதரவு கேட்டு வந்திருந்த 70 மீனவ பட்டங்கட்டியார்களையும், அவர்களை ஆயத்தப்படுத்தி அழைத்து வந்த குதிரை வணிகர் ஜான் டி குரூஸையும் உடனடியாக சந்தித்தார். போர்த்துக்கீசிய படையின் ஆதரவைத் தெரிவித்தார்.

**எழுபது பட்டங்கட்டியார்களும் திருமுழுக்கு பெறுதல்**

கொச்சி விகார் ஜெனரல் மைக்கேல் வாஸ் மூலம் 70 பட்டங்கட்டியார்களும் திருமுழுக்கு பெற ஜான் டி குரூஸ் ஏற்பாடுகளைச் செய்தார். 1535 ல் கொச்சி தேவ அன்னை ஆலயத்தில் அனைவருக்கும் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. திருமுழுக்கு பெற்ற 70 பட்டங்கட்டியார்களில் பெரும்பாலானோர் தங்களுக்கு இந்த உதவியைச் செய்த ஜான் டி குரூஸ் பெயரையே தங்களது திருமுழுக்கு பெயராக விரும்பி தெரிந்து கொண்டனர். அன்றையதினம் முதல் போர்த்துக்கீசிய படையால் பாதுகாக்கப்படும் 'பதுரவாதோ' எனும் உரிமையை மீனவ பரதவ கிறிஸ்தவர்கள் பெற்றனர்.

1536 பெப்ருவரியில் பேரோவாஸ் டி அமர் தலைமையில் தூத்துக்குடி நோக்கி போர்த்துக்கீசிய பெரும்படையுடன் 70 பட்டங்கட்டியார்களும், கொச்சி விகார் ஜெனரல் மைக்கேல் வாஸ், பிற நான்கு குருக்களும் படை வீரர்களுடன் அதே கப்பல்களில் தூத்துக்குடி நோக்கி வந்தனர். போர்த்துக்கீசிய படை மூர் இஸ்லாமியருடன் போர் செய்து வெற்றி பெற்றது.

**உள்ளூர் மிஷனரிகளாக களம் இறங்கிய பட்டங்கட்டியார்கள்**

தூத்துக்குடியில் கரையிறங்கிய 70 பட்டங்கட்டியார்களும் தாங்கள் கொடுத்த வாக்குறுதிப்படி 33 மீனவ கிராமங்களிலும் கிறிஸ்தவ நற்செய்தியை அறிவித்து அனைவரும் திருமுழுக்கு எடுக்கும் சூழ்நிலையை உருவாக்கினர். 1536 மார்ச், ஏப்ரல் மாதங்களில் சுமார் இருபதாயிரம் மீனவ பரதவர் திருமுழுக்கு பெற்றனர்.

**உள்ளூர் மிஷனரிகளாக செயல்பட்ட வேதியர்கள்**

1542 இல் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த தூய.சவேரியார் மற்றும் அவரோடு பணி செய்த பிரான்சிஸ் மன்சிலாஸ், ஜாவோ டி ஆர்த்தியாகோ அவர்களைத் தொடர்ந்து பணி செய்த அந்தோனி கிரிமினாலி, அன்டிரிக் அன்டிரிக்ஸ் என அனைவரும் உள்ளூர் மக்களுக்கு வேத அறிவைக் கொடுத்து ஊழியப் பயிற்சி அளித்து வேதியர் எனும் உள்ளூர் மிஷனரிகளை உருவாக்கினர். இவர்கள் கணக்குப் பிள்ளைகள் என்றும் உபதேசிமார்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.

**16 ஆம் நூற்றாண்டின் கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் உள்ளூர் மிஷனரிககளுக்காக வேதியர் பயிற்சி பள்ளி தொடங்கப்படுதல்**

ஐரோப்பிய குருக்கள் இல்லாத கிராமங்களில் நற்செய்திப் பணிசெய்யும் படியாக மீனவர்களில் ஆர்வம் உள்ளவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வேத அறிவை புகட்டி, ஊழிய பயிற்சி அளித்து வேதியர் எனும் உபதேசிமார்களாக அனுப்பும் செமினரியை தந்தை அன்டிரிக்ஸ் அடிகளார் புன்னக்காயலில் நிறுவினார். இங்கு 1550 இல் 10 பேர் பயிற்சி பெற்று ஊழியத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

புன்னக்காயலில் தந்தை அன்டிரிக்ஸ் அடிகளாரால்

நடைபயண மறைக்கல்வியாளர் குழு எனும் நற்செய்தி பரப்பும் உள்ளூர் மிஷனரி குழுவும் தொடங்கப்பட்டது. பின்னர் அவை பிற மீனவ கிராமங்களிலும் தொடங்கப்பட்டன. பொதுநிலை மக்கள் மத்தியில் நற்செய்தியை பறைசாற்ற உள்ளூர் மக்களைக் கொண்ட பிறரன்பு சகோதரத்துவ சபை தந்தை அன்ட்ரிக்ஸ் அடிகளாரால் தொடங்கப்பட்டது.

**17 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் உள்ளூர் மிஷனரிகள்**

தத்துவ போதகர் தந்தை இராபர்ட் டி நொபிலி 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நற்செய்தி பணியாற்ற தென் தமிழ்நாட்டிற்கு வந்து மதுரை மிஷனை நிறுவி பணிகளை தொடங்கினார். இவர் காலத்தில் உயர் வகுப்பினருக்கு நற்செய்தி பணியாற்ற தனி உள்ளூர் மிஷனரிகளும், பிற வகுப்பினருக்கு நற்செய்தி பணியாற்ற தனி உள்ளூர் மிஷனரிகளும் பயிற்சி கொடுக்கப்பட்டு அனுப்பப்பட்டனர்.

17 ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில் இயேசு சபை மிஷனரியாக தூய. ஜான் டி பிரிட்டோ தமிழ்நாட்டிற்கு வந்தார் காவிரி டெல்டா கிராமங்களிலும் சேதுபதி ஆட்சி செய்த மறவநாட்டிலும் காமநாயக்கன்பட்டி, வடக்கன்குளம் போன்ற தென் தமிழ்நாட்டின் உட்புற பகுதிகளிலும் நற்செய்தி பணியாற்றிய இவர் **சிலுவை உபதேசியார்** தலைமையிலான உள்ளூர் மிஷனரி குழுவை தம்மோடு வைத்திருந்தார். அவர்களைத் தனியே ஊழியத்திற்கு அனுப்பியதோடு தாம் ஊழியத்திற்கு செல்லும் இடங்களுக்கும் அழைத்துச் சென்றார். ஊழியத்தில் தாம் பின்பற்றிய வழிமுறைகளை அவர்களும் கையாளச் செய்தார்.

## சீர்திருத்த கிறிஸ்தவத்தில் உள்ளூர் மிஷனரிகள்

**சீகன்பால்க் காலம்**

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீகன்பால்க் மற்றும் புளுச்சோ தமிழ்நாட்டிற்கு வந்தனர். இவர்கள் மூலம் அநேக உள்ளூர் மிஷனரிகள் எழுப்பினர். அதில் ஆறுமுகம் பிள்ளை ஆரோன் என திருமுழுக்கு பெற்று உபதேசியார் ஆகி பின்னர் குருவாகி முதல் சீர்திருத்த கிறிஸ்தவ தமிழ் குரு எனும் சிறப்பைப் பெற்றார்.

**சுவார்ட்ஸ் காலம்**

S.P.C.K மிஷன் சங்க மிஷனரியாக நற்செய்தி பணியை சிறப்புற செய்த தந்தை சுவார்ட்ஸ் ஐயரவர்கள், கோலாப்வ் ஐயரவர்கள் போன்றோர் உள்ளூர் மிஷனரிகளை உருவாக்குவதில் முனைப்புடன் செயல்பட்டார்கள். இவர்களால் உருவாக்கப்பட்டு தென் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்பட்ட உள்ளூர் மிஷனரிகள் பின்வருமாறு:-

1. கற்பகம் சத்தியநாதன்
2. சின்னமுத்து தாவீது சுந்தரானந்தம்
3. கோகிலா லட்சுமி குளோரிந்தா
4. வேதநாயகம் சாஸ்திரியார்
5. மகாராசன் வேதமாணிக்கம் தேசிகர்

**சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தம்**

சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தன் ஆகிய இரு உள்ளூர் மிஷனரிகளின் தொடர் நற்செய்திப் பணியால் 1800 - 1804 க்கு உட்பட்ட காலகட்டத்தில் தென் தமிழ்நாட்டில் சுமார் 60 கிராமங்களை சார்ந்த சுமார் 6000 பேர் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவர்கள் ஆனார்கள். ஆனால் இவ்விருவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இந்த மாபெரும் எழுப்புதல் விரிவடையாமல் சுருங்கி போனது. சத்தியநாதன் திருநெல்வேலி மிஷனில் இருந்து 1804/1805 இல் தஞ்சாவூருக்கு சென்று விட்டார்.

S.P.C.K மிஷன் ஊழியத்தின் அக்கால பொறுப்பாளரான ரிங்கல்தௌபே சரிவர விசாரிக்காமல் அவசர கோலத்தில் 60 கிராமங்களில் ஏற்பட்ட மாபெரும் மக்கள் திரள் எழுப்புதலுக்கு மூல காரணமாக இருந்த நாடார் உவரி சபை ஊழியரான தாவீது சுந்தரானந்தத்தை 1806 இல் உபதேசியார் பொறுப்பிலிருந்து பணிநீக்கம் செய்தார். ஏற்கனவே நாடார் உவரி சபை ஊழியர் தாவீது சுந்தரானந்தம் உபதேசியாருக்கு குட்டம் நாடார்களிடமிருந்து பெரும் அச்சுறுத்தல்கள் வந்துகொண்டு இருந்ததால் அக்காலத்தின் பெரும் பணக்காரரும் நிலக்கிழாருமான பெத்லகேமை சொந்த ஊராகக் கொண்ட கைலாச நாடார் பெத்லகேமில் இருந்த தமது சொந்த வீட்டில் தாவீது சுந்தரானந்தம் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார். உபதேசியார் பொறுப்பிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் குட்டத்து நாடார்களின் ஏற்பாட்டில் பதநீரில் விஷம் கலந்து கொடுக்கப்பட்டதால் தாவீது சுந்தரானந்தம் பெத்லகேமில் மரணமடைந்தார். அவர் மரணம் அடைந்த இடத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவருக்கு அங்கே கல்லறை கட்டப்பட்டது. சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட அந்த கல்லறை தற்போது புதுப்பிக்கப்பட்டு சிறப்பாக பேணப்பட்டு வருகிறது.

**குளோரிந்தா அம்மையார்**

குளோரிந்தா அம்மையார் நற்செய்திப் பணியை சிறப்பாக செய்தவர் ஆவார். சீர்திருத்த கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை இவர் கட்டியிருந்தார். அக்கால திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்த 20 சீர்திருத்த கிறிஸ்தவ தேவாலயங்களில் பிராமணமாது கட்டிய தேவாலயமே பெரிதாக இருந்தது என 1820 இல் ரேனியஸ் சி. எம். எஸ் மிஷனுக்கு அனுப்பியுள்ள குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

மாலை வேளையில் சிந்துபூந்துறையில் இருந்து வண்ணார்பேட்டை நோக்கி தாமிரபரணி ஆற்றை கடந்து இவர் வருகையில் தாமிரபரணி ஆற்றில் நீரின் அளவு அதிகமானதால் ஆற்றில் மூழ்கி மரணம் அடைந்த இவரது உடல் வண்ணார்பேட்டையில் தாமிரபரணி ஆற்றுக்கரையோரத்தில் படித்துறையையொட்டி கரை ஒதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது. இச்சம்பவம் 1804 க்கும் 1806 க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்தது. அக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரி யாரும் பாளையங்கோட்டையில் இல்லை.

செவிவழிச் செய்தியின்படி அந்த இடத்திலேயே குளோரிந்தா அம்மையாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அந்த இடத்தில் குளோரிந்தா அம்மையாரின் மூலம் உதவிகளை நன்மைகளைப் பெற்ற ஜனங்கள் சிறிய கோவில் எழுப்பியதாகவும் கூறப்படுகிறது.

**வேதநாயகம் சாஸ்திரியார்**

வேதநாயகம் சாஸ்திரியார் திருநெல்வேலியை

பூர்வீகமாகக் கொண்டவர், சுவார்ட்ஸ் ஐயரவர்களால் தஞ்சாவூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு வளர்க்கப்பட்டவர். தஞ்சாவூரில் தங்கியிருந்து தமிழ் நாடெங்கும் மற்றும் இலங்கையிலும் நற்செய்திப் பணியை கதாகாலட்சேபம் எனும் பஜனை பிரசங்கம், சதுர் பிரசங்கம் வாயிலாக சிறப்புறச் செய்தவர்.

**மகாராசன் வேதமாணிக்கம் தேசிகர்**

மகாராசன் வேதமாணிக்கம் தேசிகர் தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளூர் மிஷனரியாக மிகச்சிறந்த அடித்தளத்தை உருவாக்கியவர் ஆவார்.

**S.P.G மிஷனின் உள்ளூர் மிஷனரி சுவாமியடியான்**

நாசரேத், முதலூர், இடையன்குடி, சாயர்புரம், தூத்துக்குடி ஆகிய ஊர்கள் S.P.G மிஷனின் தலைமை பணியிடங்களாக இருந்தது. 1820 இல் நாசரேத்தில் ஆசிரியர் மற்றும் சபை ஊழியராகப் பணியைத் தொடங்கியவர் க.சுவாமியடியான் உபதேசியார். இவர் நாசரேத்தின் பிரதான முக்கந்தராக இருந்தவரான கருப்பன் முக்கந்தருடைய மகன். அக்காலத்தில் நாசரேத்தையொட்டி இருந்த மூக்குப்பீறி ஓர் பெருங்கிராமம். அங்குள்ளோர் கிறிஸ்தவத்திற்கு செவி சாய்க்காமல் இந்து மத வைராக்கியம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். மூக்குப்பீறி கிராமத்தில் நற்செய்திப் பணி செய்யும்படியாக நாசரேத் சபை ஊழியராக இருந்த சுவாமியடியான் உபதேசியாருக்கு 1838 இல் கூடுதல் பொறுப்பாக மூக்குப்பீறி சபையும் கொடுக்கப்பட்டது. அவர் காலையிலும் மாலையிலும் இரு இடங்களிலும் ஜெபம் நடத்தினார். பகல் வேளைகளில் மூக்குப்பீறி கிராமத்தாருக்கு நற்செய்தி அறிவித்து வந்தார். மூக்குப்பீறியில் அவருக்கு அதிக அளவு உறவினர்கள் இருந்தனர். தமிழ் சித்த மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவராக அவர் இருந்தபடியினால் மருத்துவம் வாயிலாக அவருக்கு அந்த கிராமத்தில் ஊழியம் செய்ய திறந்த வாசல் கிடைத்தது. அருகில் இருந்த கிராமமான மாவீடுபண்ணை பெருநிலக்கிழார்கள் சின்ன மாவீடுபண்ணை என்றழைக்கப்பட்ட மூக்குபீறியின் நிலபுலன்களில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். வீர உணர்வும் தைரியமும் மிக்க சுவாமியடியான் உபதேசியார் மாவீடுபண்ணை பெருநிலக்கிழார்களின் ஆதிக்கத்திற்கு தமது தைரியமான முயற்சியினால் முடிவு கட்டினார். மூக்குப்பீறி கிராமத்தாருக்கு அவர்களது நிலபுலன்களில் சுயாதீனம் கிடைக்கச் செய்தார். இதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த மூக்குப்பீறி கிராமத்தார் அவர் மூலம் வேகமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டார்கள். ஒரு சில ஆண்டுகளுக்குள் மூக்குப்பீறி கிராமத்தில் 90 சதவீதத்தினர் கிறிஸ்தவர்களானார்கள். மூக்குப்பீறி S.P.G மிஷனின் முதல் பெரிய சபை என்ற அந்தஸ்தைப் பெற்றது. சுவாமியடியான் உபதேசியார் மரணம் அடைந்தபோது இவரது உடலை சொந்த ஊரான நாசரேத்திற்கு கொண்டு போகவிடாமல் மூக்குப்பீறி தூய.மாற்கு மேல்நிலைப்பள்ளி வளாகத்திலேயே அடக்கம் செய்தனர். இவருக்கு பின் சுமார் 25 ஆண்டுகள் கழித்து இவரது மனைவி பாக்கியத்தம்மாள் நாசரேத்தில் மரணம் அடைந்தபோது அவரையும் இவரது கல்லறை அருகே அடக்கம் செய்தனர். இன்றளவும் அந்த இரு கல்லறைகளும் இந்த பள்ளி வளாகத்தில் உள்ளன. ஆண்டுதோறும் தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல அளவில் ஆண்டு விழா பண்டிகை கொண்டாடப்படுகிறபோது பேராயர் அவர்களால் இவரது கல்லறைக்கு மலர் வளையம் வைக்கப்பட்டு மரியாதை செய்யப்படுகிறது.

**ரேனியஸ் காலம்**

கிராமங்களில் கணவன் மனைவியராய் தங்கியிருந்து ஆசிரியர் பணியையும் உபதேசியார் பணியையும் இணைந்து செய்கிற Teacher cum Catechist எனும் உள்ளூர் மிஷனரி பணிக்கு ஆண்களை பயிற்றுவிக்கும் செமினரி ஹாப்வ் ஐயரவர்களால் 1818 இல் பாளையங்கோட்டையில் நிறுவப்பட்டிருந்தது. அதை 1820, 1821 இல் ரேனியஸிடம் ஹாப்வ் ஒப்படைத்தார். உபதேசிமார்களின் மனைவியராக வருகிற பெண்கள் ஆசிரியராக, வேத அறிவு பெற்றவராக இருக்க வேண்டும் என்பதற்காக பெண்களை பயிற்றுவிக்கும் செமினரியை 1823 இல் ரேனியஸ் தொடங்கினார். இவ்விரு செமினரிகளாலும் நன்கு வேத அறிவு, கல்வி அறிவு பெற்ற ஆண்களும் பெண்களும் உருவானார்கள். அவர்கள் குடும்ப வாழ்வில் இணைந்த போது சிறந்த உள்ளூர் மிஷனரி குடும்பமாக கிராமங்களில் சிறப்பாகச் செயல்பட்டார்கள் அவர்களில் சில முக்கியமான சபை ஊழியரது பெயர்கள் பின் வருமாறு.

**1. தாவீது உபதேசியார்**

(தலைமை விசாரணை உபதேசியாராக இருந்தவர் தாவீது பிள்ளை என்றறியப்பட்டவர்), புதிய கிறிஸ்தவர்களுக்கு துன்பங்களைக் கொடுத்த வேளாளர் சமூக பண்ணையார்களை சமாளித்து கண்டித்து புதிய கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு அரணாக விளங்கியவர், ஆற்காட்டை தலைமை இடமாகக்கொண்டு **ஜெர்மன் இவாஞ்சலிக்கல் மிஷன்** ஊழியத்தை ரேனியஸ் செய்து கொண்டிருந்தபோது கண்ணீர் கடிதங்களை அனுப்பி அவரை மீண்டும் திருநெல்வேலிக்கு அழைத்து வந்தவர் இவர்.

இவர் நேரடியாக தலையிடுகிறார் என்றவுடன் இடையன்குளம் கிராமத்தை அச்சுறுத்தி வந்த சுப்பிரமணிய பிள்ளை, ஓமநல்லூர் பத்தமடையாப் பிள்ளை போன்றோர் பின்வாங்கிப் போனார்கள் இவர் மிகுந்த தைரியமிக்கவர் மட்டுமல்லாது நற்செய்தி அறிவிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

**2. தாவீது உபதேசியார்**

(பண்ணவிளை தாவீது என்றறியப்பட்டவர், பெரும் பணக்காரர், மிஷன் கிராமம் உருவாக தமது நிலங்களை வழங்கியவர்)

3. முத்தையா உபதேசியார்,கடாட்சபுரம்
4. இரத்தினம் உபதேசியார், டோனாவூர்
5. மிக்கேல் பிள்ளை உபதேசியார், மெஞ்ஞானபுரம்
6. விசுவாசம் உபதேசியார், நல்லூர்
7. கரிசல் கிராம உபதேசியார்
8. தேவசகாயம் உபதேசியார்
   (இடையங்குளம் மற்றும் மருதகுளம்)
9. யோவான் உபதேசியார்
   வீரவநல்லூர் மற்றும் கல்லிடைக்குறிச்சி
10. யாக்கோபு உபதேசியார்
   குருவன்கோட்டை, ஆலங்குளம்

# ஆலடிபட்டி சபை வரலாறு

R. பாலச்சந்திரன் ,
சுரண்டை

நெல்லை திருமண்டலம் தென்காசி மாவட்டம் சுரண்டையில் 1991 ஆம் ஆண்டு எங்கள் தகப்பனார் திரு A.S.A. ரத்தினசாமி அவர்கள் மறைவுக்குப் பின், எனக்கென்று கொடுக்கப்பட்ட இடத்தில், தேவையற்றது, கவனிக்க முடியாது போன்ற இடங்களை விற்று அநேக கடைகள் கட்டி வாடகைக்கு கொடுத்து வந்தோம். 1996 ம் ஆண்டு ஒருநாள் மனதில் நமக்கென்று எவையெல்லாமோ செய்கிறோம். ஆனால் இதற்கு உதவி செய்கிற கர்த்தருக்கு ஒன்றும் செய்யவில்லையே என்ற எண்ணம் மனதில் தோன்றியது. **'கர்த்தர் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்கும் கர்த்தருக்கு என்னத்தை செலுத்துவேன்'** என்ற வசனமும், **'எத்தனை நன்மைகள் எனக்கு செய்தீர் எப்படி நன்றி சொல்வேன்'** என்ற பாடலின் வரிகளும் கண்முன் தோன்றியது. கர்த்தர் நம்மை வைத்திருக்கும் நிலையில், கர்த்தருக்கென்று ஒரு ஆலயம் கட்டுவதுதான் சரி என்று மனதில் பட்டது. அடுத்து எங்கே கட்டுவது என்ற கேள்வி மனதில் தோன்றியது. அந்நாட்களில் திருமதி ஜெயின் பாட்டி அவர்கள் குலையநேரியில் ஆலயம் கட்ட வேண்டும் என்று பிரயாசப்பட்டார்கள். முதலில் குலையநேரியைப் பற்றி நினைத்தாலும், அது எனக்கு சரியாக தெரியவில்லை. அந்நாட்களில் 'ஜெப ஐக்கியம்' ஊழியம் மூலம் ஆலடிபட்டியில் உள்ள பள்ளி ஒன்றில் ஒவ்வொரு வாரமும் வியாழன் அன்று ஒரு கூடுகை நடைபெற்று வந்தது. அநேகர் ஆர்வமாய் அக்கூட்டங்களில் கலந்து கொண்டார்கள். சிறு பிள்ளைகளும் அநேகர் வந்து கைதட்டி பாட்டுபாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். அதை பார்த்தபொழுது ஆலடிபட்டியில் ஒரு ஆலயம் கட்டினால், அது ஒரு ஆவிக்குரிய சபையாக நிலைக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

அப்பொழுது புதுச்சுரண்டை சபை பங்களாச்சுரண்டை சேகரத்தோடு சேர்ந்து இருந்தது. Rev. J. S. ஞானராஜ் ஐயா அவர்கள் குருவானவராக இருந்தார்கள். நான் அந்த சேகரத்தின் பொருளாளராக இருந்தேன். ஒருநாள் ஐயா அவர்களிடம் கர்த்தர் கொடுத்த இந்த திட்டத்தைப் பற்றி கூறினேன். மிகுந்த சந்தோஷப்பட்டார்கள். 24.2.1996 அன்று ஐயா அவர்களும் திரு. ஞானபிரகாசம் ஆசிரியர் இருவரும் இடத்தை பார்க்க வந்தார்கள். 3 பேரும் இடத்தை பார்த்துவிட்டு ஜெபித்துவிட்டு வந்தோம். 6.3.1996 அன்று ஆலடிபட்டி ஆலயம் கட்ட ஆலோசனை கூட்டமாக ஒரு ஸ்பெஷல் கமிட்டி கூட்டப்பட்டது. எல்லாரும் ஆதரவு தெரிவித்தார்கள். அதே நாளில் ஆலயம் கட்டுவதற்கான 13 செண்டு இடம் பத்திரம் முடிக்கப்பட்டது.

அடுத்து ஆலயம் எந்த அளவில் கட்டுவது என்ற எண்ணம் ஏற்பட்டது. முதலில் சிறிய ஆலயமாக கட்ட நினைத்தேன். பிறகு இந்நாட்களில் சபைகளின் வளர்ச்சிகளை பார்க்கும்பொழுது சற்று பெரியதாக கட்டினால் நல்லது என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்பொழுது சாலமோன் கட்டிய ஆலயத்தின் அளவுகள் ஞாபகத்திற்கு வந்தது. சாலமோன் கட்டின ஆலயம் 60 முழ நீளமும் 20 முழ அகலம் என்ற வசனங்கள் மனதில் வந்தது. முழ கணக்கில் கட்ட முடியாவிட்டாலும் 'அடி' கணக்கில் கட்டுவோம் என்று ஆலயத்தின் உள் அளவு 60 நீளமும், அகலம் 20 அடியாகவும், ஆல்டர் பகுதி






மண்டபம் தனி அளவாகவும் போட முடிவு செய்தேன். 10.3.1996 அன்று அப்பொழுது பேராயராக இருந்த Rt. Rev. S. ஜேசன் தர்மராஜ் ஐயா அவர்கள் சுரண்டை - ஆலடிபட்டி வந்திருந்து ஜெபித்து ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தொடர்ந்து வானம் வெட்டுதல், நிரப்புதல், கல் கட்டு, செங்கல் கட்டு என்று வேலைகள் வேகமாக நடைபெற்றது. பயங்கரமான சிமெண்ட் தட்டுப்பாடு, தண்ணீர் தட்டுப்பாடு. தண்ணீர் ஆற்றிலிருந்து வண்டி மூலம் கொண்டுவரப்பட்டது. ஆலயத்தின் பின் பகுதியில் 'போர்' போட்டோம். தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் ஆலயம் கட்டுவது பற்றி எங்கள் குடும்ப உறுப்பினர்கள் யாரிடமும் ஒன்றும் சொல்லவில்லை. 1996 மே 1 ம் தேதி எங்கள் தகப்பனார் ஞாபகார்த்த ஜெபக்கூட்டம் நடைபெற்றது. யாரிடமும் ஆலயம் கட்டுவது பற்றி சொல்லவில்லை. சொன்னால் ஒருவேளை இது உன் தகுதிக்கு மீறின செயல் என்று சொல்லி சோர்வடைய செய்வார்கள் என்றும் பயம். ஆகவே யாரிடமும் இது பற்றி ஒன்றும் கூறவில்லை. ஒரு வழியாக ஆலய வேலை ஜூன் 1996 கடைசியில் எல்லா வேலைகளும் முடிந்தது. அடுத்து எப்பொழுது பிரதிஷ்டை என் மனதில் காலையில் நடைபெற உள்ள 100 வது ஸ்தோத்திர பண்டிகையின் போது பிரதிஷ்டை செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். ஐயா அவர்களிடம் அதை சொன்னபோது ஏற்றுக்கொண்டார்கள்.

அதின்படி 3.7.1996 ல் ஆலயம் பிரதிஷ்டை செய்தார்கள். அவர்களோடு இங்கிலாந்தைச் சேர்ந்த பேராயர் ஒருவரும் கலந்து கொண்டார். பங்களாச் சுரண்டை, கீழச்சுரண்டை, புதுச் சுரண்டை என எல்லா சபையை சேர்ந்த மக்கள் பெருங்கூட்டமாய் கலந்துகொண்டார்கள். பேராயர் இருவரும் ஆலடிபட்டி விலக்கிலிருந்து சாரட்டில் அழைத்து வரப்பட்டார்கள்.

பேராயர் அவர்கள் ஆலயத்தின் உள்ளே வந்து பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். இப்பொழுதுதானே அடிக்கல் நாட்டினேன். அதற்குள் எப்படி கட்டி முடித்தீர்கள். எவ்வளவு ஆயிற்று என்று கேட்டார்கள். ஆலய கட்டுமான செலவு கணக்குகள் தினமும் எழுதி வந்தாலும், மொத்த செலவு கணக்கு போட மனதில்லை. கடவுள் காரியத்தில் கணக்கு பார்க்கக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டபடியால் மொத்த செலவு எவ்வளவு என்று பார்க்கவில்லை. இப்படியாக, மூன்று மாத காலத்தில் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. முதல் சபை ஊழியராக திரு. A. ஆசை தம்பி நியமிக்கப்பட்டார். சபையின் வளர்ச்சிக்காக மிகவும் பிரயாசப்பட்டார். இந்தச் சபை கட்டப்பட்ட காலத்தில் இதின் வளர்ச்சிக்காக - கட்டுமான பணிக்காக ஜெபித்த மூன்று அம்மாக்களை குறிப்பிட வேண்டும்.

வேளாள் அம்மா, ஆபிரகாம் பெயிலர் அம்மா, தா்மம் அம்மா. மூன்று பேரும் அதிகம் ஜெபித்தார்கள். எப்பொழுதும் ஆலயம் கட்டப்படும் இடத்தில் தென்புறம் உள்ள மரத்தடியில் காலை முதல் மாலை வரை ஜெபித்துக் கொண்டே இருந்தார்கள்.

ஆலய பிரதிஷ்டைக்கு முன்பு டாக்டர் ஆனந்த ஸ்திரா மற்றும் திரு குருஸ் திவாகரன் அவர்கள், ராஜபாளையத்திலிருந்து வந்த பாடகர் குழுவினர் ஆலயத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆலயத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். 14.7.1996 ல் ஆலய அசன பண்டிகை மிக சிறப்பாக நடைபெற்றது. 30.7.96 ல் ஆலயத்தில் நடந்த முழு இரவு ஜெபத்தில் இந்த வரலாறு எழுதி வாசிக்கப்பட்டது.

# வரலாற்றுச் செய்தி

தென்னிந்திய திருச்சபை கோவை திருமண்டலம் ரத்தினபுரி சேகர ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர் மிஷன் வரலாற்றுச் சுற்றுப்பயணமாக தென் தமிழகத்தில் இறைப்பணியாற்றிய மிஷனெரிகள் நினைவிடங்களையும் அவர்கள் உருவாக்கிய பணித்தளங்களையும், ஆலயங்களையும், இன்றைக்கு இருக்கும் திருச்சபை வளர்ச்சிப் பணிகளையும் பார்வையிடுவதற்கு திருச்சபையின் தலைவர் அருள்திரு. விக்டர் பிரேம்குமார் ஐயா தலைமையில் சுமார் 55 பேர் வந்திருந்தார்கள். அவர்களை திருநெல்வேலி கதீட்ரல் பேராலைய தலைவர் சார்பாக உதவி குருவானவர் அருள்திரு பொன்ராஜ் அவர்கள் வரவேற்றார்கள் மற்றும் சபை ஊழியர் திரு. தனபால் ரேனியஸ் ஐயரின் வாழ்வும் பணியும் என்ற வரலாற்று பார்வையில் விவரித்தார்கள். பின்னர் அங்கிருந்து நெல்லை அப்போஸ்தலர் கனம் ரேனியஸ் நினைவிடம் சென்றோம். அங்கிருந்து பாளையம்கோட்டையில் உள்ள மில்டரி லைன் ஆலயத்தில் உள்ள பேராயர் சார்ஜென்ட் மற்றும் வேதாகம மொழிபெயர்ப்பு பணி செய்த கனம் ஹென்றி பவர் நினைவிடம் மற்ற மிஷனெரிகளின் நினைவிடங்களையும், அவர்கள் செய்த பணிகளையும் நினைவு கூர்ந்தோம். பெருமன்ற உறுப்பினர் மைகேல் அவர்கள் வரவேற்றார். அதன் பின்பு நெல்லை திருச்சபை உருவாக காரணமாக இருந்த குளோரிந்தாள் ஆலயம், நினைவிடம், அங்கு விதைக்கப்பட்ட மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் நினைவு கூர்ந்தோம். குறிப்பாக சாயர்புரம் உருவாக காரணமாக இருந்த சாமுவேல் சாயர் அவர்கள் நினைவிடம் பார்த்தோம்.



பின்னர் அங்கிருந்து தூத்துக்குடி நாசரேத் பேராலயம் சென்றோம். பேராலய தலைவர் சார்பாக வரவேற்று அங்கு மதிய விருந்து அருள்திரு. ஜான் வெஸ்லி ஐயரவர்கள் ஏற்படுத்தி இருந்தார்கள். இரண்டு உபதேசியார்கள் மிக சிறப்பாக கவனித்தார்கள். பின்பு ஆலயத்தில் சமூக ஆர்வலரும் வரலாற்று எழுத்தாளரும் பண்டாரசெட்டிவிளை சேகர தலைவர் அவர்கள் நாசரேத் சபை உருவான விதம் ஆர்தர் மார்காஷிஸ் காலரா காலத்தில் ஆற்றிய பணிகள் மற்ற மிஷனெரிகள் ஆற்றிய பணிகளையும் விவரித்தார்கள். நினைவிடங்களையும் பார்த்தோம். அங்கிருந்து மெய்ஞானபுரம் சென்றோம். ஜாண் தோமாஸ் ஐயர் செய்த பணிகளையும் நினைவிடத்தையும் பார்த்தோம். அங்கு அருள்திரு. ஜேசு விக்டர் ஐயா அவர்களும் அருள்திரு. ஜான் சாமுவேல் ஐயரவர்களும் ஆலோசித்து வழிநடத்தினார்கள்.

அங்கிருந்து நெல்லையின் முதல் இரத்த சாட்சி தாவீது சுந்தரானந்தம் உருவாக்கின முதல் கிறிஸ்தவ கிராமத்தை பார்வையிட சென்றோம். அவர் தடிக்கம்பு சேனையின் மூலமாக திருச்சபை எப்படி திருச்சபை மக்களை பாதுகாத்தார் என்றும் அவர் செய்த பணிகளையும் சென்று பார்த்தோம்.

அதன் பின்பு திராவிடம் என்ற இனத்துக்கு முகவரி தந்த திராவிட ஒப்பிலக்கண தந்தை பேராயர் கால்டுவெல் அவர்களின் நினைவிடம் சென்றோம். சேகர தலைவர் சார்பாக சபை மக்கள் வரவேற்றார்கள்.

பின்னர் அங்கிருந்து பிஷப் சார்ஜென்ட் அவர்கள் பணி செய்த சுவிஷேசபுரம் சென்றோம். அங்கு அருள்திரு வேதன்பு ஐயரவர்கள் அங்கு பணி செய்த மிஷனெரி பணிகளை குறித்தும் அநேக வரலாற்று காரியங்களை குறித்தும் பகிர்ந்து கொண்டார்கள். ஐயரவர்கள் ஜெபித்து வழி அனுப்பி வைத்தார்கள்.

இந்த மிஷன் வரலாற்றுச் பயணத்திற்கு அனைத்து வகையிலும் உதவி செய்த அனைவருக்கும் மற்றும் கோவை ரத்தினபுரி சேகர ஆண்கள் ஒவ்வொருவருக்கும் வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் நாவலாசிரியர்

அ.மாதவையா அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்

## தொடர்– 24



**ஒளியும் நிழலும்**

பாட்டனாரின் கல்லறைக் கோவிலுக்கு எதிரே அவர்கள் அந்தப் புதுமைச் சடங்கின்படி மோதிரங்களை மாற்றிக் கொண்டார்கள். லிட்டில்டன் அன்புடன் அவளை முத்தமிட்டார். கிளாவிருந்தா மகிழ்ச்சி பெருக ஆனந்தக் கண்ணீர் விட்டாள். ஷெர்கான் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டுத் தமக்கு உடனடியாகக் கவனிக்க வேண்டிய இராணுவ அலுவல்கள் இருப்பதாகச் சொல்லி குதிரையில் ஏறித் திருச்சிராப்பள்ளி சென்றுவிட்டார். லிட்டில்டன் கிளாவிருந்தாவை அணைத்தபடி கோவிலின் அருகில் உட்கார்ந்தார். அவர் அரவணைப்பில் மகிழ்ந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் கிளாவிருந்தா.

முன்னொரு நாள் லிட்டில்டன் உணர்ச்சி பெருக, உள்ளத்திலிருந்து பொங்கி வந்த வார்த்தைகளால் பேசி தமது அன்பை வெளியிட்டு அவளது அன்பைக் கோரியபோது, அவளது நெஞ்சம் ஆனந்தத்தாலும் பெருமிதத்தாலும் பொங்கியது. தன் மனதில் இதுவரை இருந்துவந்த சஞ்சலத்தின் தாபத்தின் காரணம் என்ன என்பதை அவள் அப்பொழுது ஒரு நொடியில் இயற்கையறிவால் உணர்ந்தாள். அவள் தானும் அவரை விரும்புவதாகச் சொன்னதுமின்றி, உள்ளத்தைத் திறந்து மாதவனுக்குமிடையே எல்லாவற்றையும் அவளுக்கும் இருந்த சம்பந்தத்தைப் பற்றியும் கூடச் சொன்னாள். நன்றிப் பெருக்கினால் அவள் காதல் பரிசுத்தமும் ஆழமும் பெற்றதுபோல, அவளுடைய அதீத அழகும் துன்ப அநுபவங்களும் அவருடைய காதலை வலுவடையச் செய்தது.

இன்று கணவனும் மனைவியுமாக அவள் சிறுவயதில் மகிழ்ந்து விளையாடிய தோட்டத்தில் பாட்டனாரின் கல்லறைக்குச் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்தபோது அவள் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்தது. கண்களில் நீர் பொங்க, 'பாபாஜி நிச்சயம் இதை ஒப்புக்கொண்டிருப்பார். உங்கள் மீது அவருக்கு மிகவும் பிரியம். நான் பட்ட துன்பங்களை நினைக்கும்போது, அவர் இருந்திருந்தால் நான் மகிழ்ச்சியடைவதற்காவது இதை அனுமதித்திருப்பார். இப்பொழுது உங்கள் மார்பில் என் தலை சாய்ந்திருக்கும் இந்த இன்ப வேளையில் என் உயிர் போவதானால்கூட நான் மன நிம்மதியுடன் செல்வேன். இந்தக் கணத்தின் மகிழ்ச்சிக்கு ஈடாக உலகில் வேறு எதுவுமே இருக்கமுடியாது. கடந்த காலத்தின் துன்பம் அனைத்தையும் மாற்றிவிட இது ஒன்றே போதுமானது' என்றாள்.

அவர் பதில் எதுவும் சொல்லாமல் தம் நெஞ்சோடு அவளை அணைத்து, முத்தங்களினால் அவள் கண்ணீரைத் துடைத்து 'கிளாரிந்தா, என் அன்பே' என்றார். அவர் அவள் பெயரை ஏற்கெனவே **'இந்திய நாட்டின் ஒளி மலர்'** என்று பொருள்கூறி கிளாரிந்தா என்று மாற்றியிருந்தார். பெண்மையின் இலட்சியமாக அவர் போற்றி வந்த தமது தாயின் பெயர் கிளாரிபெல் என்பதும் அவர் கிளாவிருந்தாவை கிளாரிந்தாவாக மாற்றியதற்கு ஒரு காரணமாகும்.

அக்கினி தேவனின் சந்நிதியில் மணந்தவர்களோ, மன்மதனின் கணையால் ஒன்றுசேர்ந்தவர்களோ, யாராயினும், அந்த நகரத்தில் இவர்களுக்கு இணையாக மகிழ்ச்சியுள்ள வேறு தம்பதிகள் இருக்கவில்லை. ஓர் உயர்குல இந்து மனைவி தனது கணவனிடம் கொண்டுள்ள பக்தி, ஸ்பார்ட்டா நகரத்து அன்னையரின் வீரத்தைப்போல, ஸ்விச்சர்லாந்தியரின் சுதந்திரப் பற்றைப்போல, ஸ்காட்லாந்தியரின் விசுவாசத்தைப்போல, மனித சமுதாயத்தில் ஓர் அலாதித் தன்மையுடன் பட்ட முறையில் அல்லாமல் முழுமனதுடன், நிஷ்காம கரும விளங்குவதாகும். அது முற்றிலும் சுயநலமற்றதாக, தனி நோக்குடன் அனுஷ்டிக்கப்படுவதால் கவிஞர்களும் தத்துவ ஞானிகளும் ஜீவாத்மா பரமாத்விடம் கொண்டுள்ள பக்திக்கு இதை உவமானப்படுத்துகிறார்கள். இந்திரிய, லோகாயத நோக்கில் திருமணத்தை ஓர் ஒப்பந்தமாகக் கருதும் இனத்தவருக்கு இந்த உவமானம் புரியாதது மட்டுமல்ல, அவர்களுக்கு அது தேவ நிந்தனையாகவும் படுகின்றது. கணவனின் குண இயல்புகள் ஒரு உயர் குல இந்து மனைவியின் பதிவிரதா தர்மத்தைப் பாதிப்பதில்லை. அவன் எப்படி இருந்தபோதிலும் இவள் தன் கடமையைப் பக்தியுடன் செய்துகொண்டு போகிறாள். அவன் அவளுடைய நாயகனும் எஜமானனும் மாத்திரம் அல்ல, தெய்வமும்கூட. அவனைத் தொழுதால் அவள் வேறு தெய்வத்தைத் தொழவேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை அவள் சிறு வயது முதலே நற்போதனையாக புராணக் கதைகள் மற்றும் உபதேசங்கள் மூலமாக அறிந்துகொள்கிறாள். இதைக் கண்டு சில மேனாட்டு எழுத்தாளர்கள் இந்து சமயம், பெண்களுக்கு

'ஆத்மா இல்லை என்ற கருத்தை உடையது' என்றுகூடக் கூறியிருக்கிறார்கள்.

விவாகத் தடை, கைம்பெண்கள் படும் துயரம், சதி-அந்த வழக்கம் இருந்தவரை-இவைகளும் பெண்களுடைய கடமையைச்சற்றுப்பலமாகவேபுகட்டிவந்தன என்று சொல்லலாம். நமது முன்னோர் கட்டுப்பாடாகச் செய்து வைத்த ஒழுக்கங்களில் இந்தப் பதிபக்தியும் ஒன்று. ஆண்களுக்கு மிகச் சௌகரியமாக இது அமைந்திருப்பதால் இந்தக் கட்டுப்பாட்டை ஆண்கள் ரொம்பவும் அப்பழுக்கில்லாமல் அமல்படுத்தி விட்டார்கள்.

கிளாவிருந்தாபாய்க்கு இனி அவளைக் கிளாரிந்தா என்றே அழைப்போம் பல விஷயங்களில் வழக்கத்துக்கு முரணான கொள்கைகள் இருந்தபோதிலும், வழி வழியாக வந்த பதிவிரதா தர்மம் அவள் இயல்பிலும் ஆழமாக ஊறிப்போயிருந்தது. பலமான எதிர்ப்புகளும் இடைஞ்சல்களும் இல்லாதிருந்தால் காலமான திவானிடம் கூட அவள் அதே பதிபக்தியுடன் தான் நடந்துகொண்டிருப்பாள்.

இப்பொழுது கடமைகளுடன் இன்பமும் அன்பும் நன்றியும் சேர்ந்துகொள்ளவே அவள் இதயபூர்வமாக கணவனுக்கு ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்து வந்தாள். புத்திசாலியான ஒரு பிராமணப் பெண்ணை மனைவியாக அடைவதின் அனுபவத்தை லிட்டில்டன் இப்பொழுது உணர்ந்துகொண்டார். அவர் எண்ணங்களையும் தேவைகளையும் அவர் சொல்லும் முன்பே குறிப்பாக இயற்கையுணர்வால் அறிந்துகொண்டு, அவைகளை நிறைவேற்ற முயன்றாள். கிளாரிந்தா பழக்க தோஷத்தால் சாதி அனுசாரத்தைப்பற்றி தன்னிடம் இன்னும் ஒட்டிக்கொண்டிருந்த சில தப்பெண்ணங்களை விட்டுவிடவும் பிரயாசம் எடுத்துக்கொண்டாள். தனது சைவ உணவையே அவரோடு மேசையில் அமர்ந்து உண்டாள். அவருடைய பிரம்மச்சாரி வாழ்க்கையில் இவள் இன்பத்தையும் மென்மையையும் கொண்டு வந்தாள். சாரதா தன்னை எஜமானி என்று நினைப்பதைப்போல அவரையும் எஜமானனாகக் கருதும்படி அவளையும் பழக்கி வந்தாள். அவள் செய்த சிறு சிறு வேலைகளிலும் அன்பும் அருளும் ஒளிவீசி, அந்த வீட்டில் மகிழ்ச்சிகளை கொட்டியது.

அவளுடைய பக்திக்கேற்றவாறு அவரும் அவள்மீது பிரியத்தைச் சொரிந்தார். வெகுநாள் கழித்துப் பிறந்த ஒரே குழந்தையைப் பேணும் தாயைப்போல அவளிடம் கனிவும் பரிவும் ஆதுரமும் காட்டி அரவணைத்தார். வைரமும் முத்தும் பட்டும் பீதாம்பரமும் வாங்கிக் குவித்தார். அன்புக்கு ஏங்கியிருந்த அவள் வாழ்வில் பிரவிகித்த இந்த அன்பால் அவள் மகிழ்ந்து நன்றியுடன் இறைவனுக்குத் துதிசெலுத்தினாள். கலப்படமில்லாத இந்த அன்புக்கு முத்தாய்ப்பாக, அவள் கருவுற்றிருப்பதை அறிந்ததும், பாத்திரம் நிரம்பி வழிந்தது. ஆனால் இந்தப் புத்தொளியின் நிழலும் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதை அவள் சிறிதும் அறியவில்லை. அவள் அவரை முற்றிலும் நம்பிவிட்டதை அவள் ஆனந்தத்தின் பாத்திரம் நிரம்பி வழிந்தது.

ஆனால் இந்தப் புத்தொளியின் நிழலும் அவளைத் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதை அவள் சிறிதும் அறியவில்லை. அவள் அவரை முற்றிலும் நம்பிவிட்டதை அவள் தன் சொல்லாலும் செயலாலும் எப்பொழுதாவது ஆணித்தரமாகக் காண்பிக்க நேர்ந்தபோதெல்லாம் அவர் பச்சாத்தாபத்தாலும் அவமானத்தாலும் குன்றிவிடுவார்.

இவள் நம்மை இவ்வளவுக்கு நம்பும் வேளையில் நாம் அவளை ஏமாற்றி வருகிறோமே என்ற பச்சாத்தாபத்தால் உணர்ச்சிவசப்பட்டு அவளிடம் உண்மையைச் சொல்லிவிடலாமா என்றுகூடச் சில வேளைகளில் துணிவார். ஆனால் அவள் வெறுத்துப் பகைத்துவிடுவாளோ என்ற பயத்தில் நாக்கு எழும்பாது. அவளுடைய பால்ய காதலன் மாதவராவ் அவள் சாதியைச் சேர்ந்தவனாக இருப்பினும், அவன் அவளை மணம் செய்துகொள்ள முன் வரவில்லை என்ற ஒரே காரணத்தினால் தான் அவனை உதறி, அத்தோடு சம்பிரமமாக உயர்குலப் பெண்மணியாகத் தன் மனிதர்களிடையே வாழும் பழக்கப்பட்ட ஒரு வாழ்க்கையையும் உதறிவிட்டதையும் நினைத்துக் கொள்வார். அப்படிப்பட்ட ஒரு பெண்ணை நடுத்தர வயதினனும் முற்றிலும் அந்நிய இனத்தவனுமான தான் ஏதோ தற்செயலாக இருமுறை அவள் உயிரைக் காப்பாற்றிவிட்ட சாதாரண மனிதாபிமானச் செயலுக்காக அவள் காட்டும் நன்றியுணர்ச்சியை அற்பத்தனமாகப் பயன்படுத்தி, அனுபவமில்லாத அவள் மனதைத் தந்திரமாகத் தன்வயமாக்கி அவள் தன்னைப் பரிபூரணமாக நம்பும்படி செய்து, ஏமாற்றி, தன் ஆசைநாயகியாக்கிவிட்டோமோ என்று அங்கலாய்ப்பார். ஒரு சிற்றின்பப் பிரியன் தெய்வ பயமில்லாமல் பேசிய புரட்டு வாதத்தில் மயங்கி தன் மனச்சாட்சியை ஏமாற்றி ஏன்தான் இப்படி ஓர் இழிவான அற்பமான செயலைச் செய்தோமோ என்று புழுங்கினார். அவளை இழந்துபோவதாகவே இருக்கட்டும்; அவளிடம் எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டியதுதான் என்று ஒருகணம் நினைப்பார். ஆனால் மறுகணம் அவளை இழப்பதா? கொடுத்ததுபோல, நோக்கமில்லாமல் திரிந்துகொண்டிருந்த குருடனுக்குப் பார்வை தன் வெற்று வாழ்க்கைக்கு அர்த்தம் தந்து தன் வீட்டுக்கு விளக்கேற்றி வைத்த அவளையா? அதை அவரால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. இங்கிலாந்திலிருந்து கடைசியாக அவருக்கு வந்த கடிதத்தில், அவருக்குச் சீக்கிரத்தில் விடுதலை கிடைக்கலாம் என்றும், எந்த நிமிடமும் அந்தச் செய்தி வரலாம் என்றும் கண்டிருந்தது. இன்னும் சிறிது காலம் இந்த இரகசிய பாவச் சுமையை மனவருத்தத்தோடு சுமந்து கொண்டிருக்க வேண்டியதுதான். செய்தது செய்தாகிவிட்டது. இனி அவளறியாமலே அதைச் சீர்ப்படுத்திவிடக்கூடிய அறிகுறிகள் தோன்றிக்கொண்டிருக்கும் சமயத்தில் அவளிடம் அதைச் சொல்லி இன்னும் கெடுப்பானேன்?

மனச்சாட்சி உறுத்தி வதைத்தாலும், அந்த வேதனையை அவள் அறிந்து கொள்ளாவண்ணம் மறைத்துக்கொண்டு அலுவல்களைக் கவனித்து வந்தார். ஆனால் சில சமயங்களில் இந்த இரகசிய வேதனையை சகிக்கமுடியாமல் அதை மறப்பதற்காகக் குடிக்கத் தொடங்கினார். குடும்பத்தில் அவர் தகப்பனாரும் அண்ணனும் குடி மிகுதியால் வரக்கூடிய சூலை நோயால் இறந்திருந்தனர். அதனால் அவர் பொதுவாக அதிகமாகக் குடிப்பதில்லை. ஆனால், இப்பொழுது அந்தப் பழக்கத்தை மேற்கொண்டார்.

**உண்மை வெளிப்பட்டது**

வயிற்றில் குழந்தை வளர வளர, அது பிறக்குமுன் முறைப்படி ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவளாகிவிட வேண்டும் என்ற ஆசை இப்பொழுது கிளாரிந்தாவுக்கு அதிகமாக உண்டாயிற்று. கிறிஸ்தவ சமயக் கொள்கைகளை இப்பொழுது நன்றாகக் கற்று அறிந்திருந்தாள். ஆங்கிலத்திலும் விரைவில் தேர்ச்சி பெற்றுவிட்டாள். புதிய ஏற்பாடும், **மோட்சப் பிரயாணமு**ம் அவளுக்குப் பிடித்தமான நூல்கள். ஞானஸ்நானத்துக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று லிட்டில்டனை அடிக்கடி கேட்டுக்கொண்டாள். அவள் ஆர்வ மிகுதியை உணர்ந்த லிட்டில்டன் சந்தேகத்துக்கு இடம் தராமல் அதை எப்படித் தள்ளிப்போடுவது என்று தெரியாமல் மனம் குழம்பினார். தஞ்சையில் தகுதிபெற்ற குரு இல்லை என்று சொல்லிச் சில காலம் தட்டிக் கழித்தார். திருச்சிராப்பள்ளி எஸ். பி. சி. கே. (S. P. C. K.) ஆங்கிலக் கிளையில் பணியாற்றிய கிறிஸ்டியன் பிரெடிரிக் சுவார்ட்ஸ் என்ற பிரசித்தி வாய்ந்த ஜெர்மானிய சமயத் தொண்டர் தஞ்சாவூருக்கு விஜயம் செய்தபோது (1771), அவர் அவளுடைய விருப்பத்துக்கு இணங்கவேண்டியதாயிற்று.

லிட்டில்டன் சுவார்ட்ஸின் குண இயல்புகளைப் பற்றிக் கேள்விப்பட்டதும், வேறு குருவால் ஞானஸ்நானம் பெற்றால் நல்லதுபோலிருக்கிறதே என்று நினைக்கத் தொடங்கினார். ஆனால், வெளிப்படையாக அவருக்கு விரோதமாக ஒன்றும் சொல்ல முடியாத நிலையில், வேறு வழியில்லாமல் துணிந்து விடவேண்டியது தான் என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டார். தூர தேசத்தில் கிறிஸ்தவமல்லாத நாட்டில் இருக்கும் ஒரு சுவிசேஷகன், அத்தனை கண்டிப்பாக, நடைமுறை புரியாத மனிதராகவா இருக்கப்போகிறார் என்று நினைத்து மனதைத் தேற்றிக்கொண்டார்.

முன்னெச்சரிக்கையாக விஷயத்தை விளக்கி ஞானஸ்நானம் கோரும் பெண்ணின் சரித்திரத்தையும், அவளுக்கும் தனக்கும் உள்ள தொடர்பையும், தான் ஏன் அவளைக் கோவிலில் கல்யாணம் செய்துகொள்ள இயலவில்லையென்றும், ஆனால் தனக்கு விடுதலை கிடைத்ததும் அவ்வாறு செய்ய நிச்சயித்திருப்பதையும் விவரித்து சுவார்ட்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

இனிமேல் எவ்விதச் சிக்கலும் ஆபத்தும் இல்லை என்று கருதி மறுநாள் காலை கிளாரிந்தாவை அழைத்துக்கொண்டு மிஷனெரியைக் காணச் சென்றார்.

சென்னையில் திருச்சபை என்ற நூலின் சரித்திராசிரியர், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியைப்பற்றி எழுதும்போது, 'பல விஷயங்களில் இது மாகாணத்தின் இருண்ட காலம். சமய வரலாற்றுப்படி மட்டும் அல்ல, சமுதாய வரலாற்றுப்படியும் அப்படியே. மேனாட்டிலிருந்து பருவ இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் இறக்குமதியாகி வந்திருக்கிறார்கள். இங்கே ஒழுக்கக்கேடு மிகுதி, மதுவுக்கு வரி இல்லை. கிறிஸ்தவக் கடமைகளையும் தெய்வ நீதியையும் புகட்டி, ஆபத்தை உணர்த்தத் தகுந்த வழிகாட்டிகள் இல்லை' என்று குறிப்பிடுகிறார்.

நாகரீக சமுதாயப் பிரச்சினைகளில் மிக முக்கியமான பிரச்சினை ஒன்று இப்பொழுதுதான் முளைக்கத் தொடங்கியது. இந்த ஜெர்மானிய மகானைப்பற்றி, **'எளிமையிலும், விவேகத்திலும், நன்மை செய்யும் ஆர்வத்திலும் இவர் எந்த மிஷனெரிக்கும் குறைந்தவர் அல்ல'** என்று பிஷப் கால்டுவெல் புகழ்ந்து எழுதியிருக்கிறார். ஆனால், லிட்டிடனின் போதாத காலம், இவர் விட்டுக்கொடுக்காத மனப்பான்மையுடையவராகவும் இருந்தார். ஒழுக்கக்கேடு எங்கு இருந்தாலும், மிகப் பெரிய பதவியுடையோரிடம் காணப்பட்டாலும், அதைக் கண்டிப்பது தமது புனிதமான கடமை என்று கருதினார். தமது சபையினர் இவ்வாறு குற்றத்தில் விழுந்து, நேர்மையான நீதியின் பாதையை விலகி, மீண்டும் மீண்டும் அதே குற்றத்தைச் செய்தால் பிடிவாதமாக அவர்களைச் சபையைவிட்டு விலக்கிவிடுவதும் உண்டு. 'கிறிஸ்தவ சமயத்தில் சேர விரும்புபவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து சபையில் சேர்ப்பதைப்பற்றி அவருக்கு மனச்சான்றுடன் கூடிய உயர்வான கொள்கைகள் இருந்தன. குருத்துவக் கடமைகளைச் சரிவர ஆற்றியவர் என்ற தகுதியான புகழையும் அடைந்திருந்தார். அவரது சக மிஷனெரிகளும் அவருக்குப் பின் வந்தவர்களும் கண்ணியம் மிகுந்தவர்களே ஆயினும், சுவார்ட்ஸைப் போல் புகழுடையவர் அல்லர். **'தென் இந்திய புராட்டெஸ்தந்து மிஷன் வரலாற்றில் அவர் பெயர் மறக்க வியலாதது'** என்று பிஷப் கால்டுவெல் மேலும் எழுதுகிறார்.

முன்னர் திருச்சிராப்பள்ளியில் இருந்தபோதே சுவார்ட்ஸ் லிட்டில்டனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். நல்ல கிறிஸ்தவன் என்று பெயரெடுத்திருக்கும் ஒரு மனிதன், மற்ற ஐரோப்பியர் மனம்போல் ஒழுக்கம் கெட்டு வாழ்வதைப் போன்று, ஓர் இந்து மாயக்காரியின் வலையில் வீழ்ந்து வீணாய்ப் போவதாகக் கேள்விப்பட்டு மனம் வருந்தினார்.

லிட்டில்டனின் கடிதத்தைப் படித்த பின்னரும் சுவார்ட்ஸுக்கு அவரைப்பற்றி ஒரு தாழ்வான எண்ணமே உண்டாயிற்று. தாம் செய்துகொண்டிருக்கும் பாவத்தின் பயங்கரத்தை உணராமல், தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களினால் நேர்ந்துவிட்டதாகவும், விடுதலை கிடைத்ததும் அவளை மணந்து கொள்ளப்போவதாகவும் சாதாரணமாக அல்லவா குறிப்பிட்டிருக்கிறார் என்று நினைத்தார். இந்துவாகப் பிறந்து வளர்ந்த ஓர் இந்தியப் பெண்ணை மணந்துகொள்ளும் பேச்சும் அந்த ஐரோப்பிய மிஷனெரியின் காதில் ஓர் அபஸ்வரமாகத் தொனித்தது. இந்த ஆங்கிலேயனிடமும், ஒரு சக ஐரோப்பியனை மயக்கிய அந்த இந்துப் பெண்ணிடமும் தன் மனதிலிருப்பதைப் பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டார்.

தன் பிரிய எஜமானிக்கு வருவது தனக்கும் வந்துவிட்டுப் போகட்டும் என்று நினைத்த சாரதா கடைசி நிமிடத்தில் தானும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவ விரும்புவதாய்ச் சொல்லவே லிட்டில்டன் இருவரையும் அழைத்துக்கொண்டு மறுநாள் காலை மிஷனெரியின் சிறிய அறையை அடைந்தார். சுவார்ட்ஸ் புத்தகங்கள் பேப்பர்கள் சூழ மேசை அருகில் இருந்தார். மடியில் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டிருந்த அவர், லிட்டில்டன் உள்ளே நுழைந்து வணக்கம் சொல்லி கையை நீட்டியதும், நீட்டிய கையை கவனிக்காதவர்போல், எழும்பாமல் தலையை மாத்திரம் ஆட்டி பதில் வணக்கம் தெரிவித்தார். கிளாரிந்தா

லிட்டில்டனுக்குப் பின்னால் நின்றிருந்தாள். குண்டாக வாய் நிறையச் சிரித்துக்கொண்டு நின்ற சாரதா அவர் கண்ணில் முதலில் படவே தாம் கண்டிக்க வேண்டிய மாயக்கள்ளி இவள்தான் என்று நினைத்துவிட்டார். தாம் தயார் செய்து வைத்திருந்த பிரசங்கத்தையும் மறந்து சிரிப்பு வந்தது அவருக்கு.

தம்மை உட்காரச் சொல்லித் தலை அசைத்துக் காண்பித்த நாற்காலியை லிட்டில்டன் கிளாரிந்தாவுக்கு விட்டு விட்டு அடுத்த நாற்காலிக்கு நகர்ந்தார். கிளாரிந்தா மிஷனெரியை நளினத்துடன் வணங்கிவிட்டு அதில் அமர்ந்தாள்.

கிளாரிந்தாவைப் பார்த்த சுவார்ட்ஸ் தம்மையும் அறியாமலே எழுந்துவிட்டார். மடியிலிருந்த புத்தகமும் கீழே விழுந்தது. அவளுடைய வணக்கத்தில் தெரிந்த ஒரு சாந்த கம்பீரமும், அவளது அழகிய முகமும் அவர் கவனத்தைக் கவர்ந்து அவளுக்கு மரியாதை செய்யத் தூண்டிற்று. குனிந்து புத்தகத்தை எடுத்துக்கொண்டு, அவளை முதலில் கவனிக்காததற்காக மன்னிப்புக் கோரினார். பின் சற்றுநேரம் வேறு எதுவும் பேசாமல் வியப்புடன் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

லிட்டில்டன்தான் பேச்சைத் தொடங்கினார், 'இதற்கு முன் உங்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லையாயினும், நீங்கள் திருச்சிராப்பள்ளியிலும் இதற்கு முன்னர் தரங்கம்பாடியிலும் செய்துவந்திருக்கும் சிறந்த பணிகளைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். உங்கள் பல அலுவல்களிடையே தஞ்சைக்கும் வந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்தப் பெண்மணியைப் பற்றித்தான் நான் உங்களுக்கு எழுதியிருந்தேன். கிறிஸ்தவ விசுவாசமும் உடையவள். முறைப்படி கிறிஸ்தவளாகிவிடவேண்டும் என்ற ஆர்வம் கொண்டு, உங்கள் கையால் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று விரும்புகிறாள். இவளுக்கு ஆங்கிலம் தெரியும். உங்களுக்கு இந்துஸ்தானியும் மராத்தியும் புரியாவிட்டால், நீங்கள் இவளுடன் ஆங்கிலத்திலேயே பேசலாம்.'

சுவார்ட்ஸ் இதற்குள் திரும்பி, வாசலருகில் நின்று சுவரில் மாட்டியிருந்த பெரிய ஜெர்மன் கடிகாரத்தையும், தாவீது சிங்கங்களைக் கிழித்துக்கொண்டிருப்பதைச் சித்தரிக்கும் ஓவியத்தையும் மாறி மாறி உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்த சாரதாவைப் பார்க்கவே, லிட்டில்டன், 'அது சாரதா, அவளுடைய பணிப்பெண், அவளும் ஞானஸ்நானம் பெற விரும்புகிறாள்' என்று சொல்லிமுடித்தார்.

ஏதோ தொலைவிலிருந்து பேசுவதுபோல் இந்தச் சொற்கள் கிளாரிந்தாவின் காதில் விழுந்தன. பாதிரியார் இன்னும் சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டுப் பின் கடுமையான குரலில் பேச ஆரம்பித்தார். 'வெட்கமில்லாமல் வெளிப்படையாக இந்தப் பெண்ணுடன் விபசாரம் செய்துகொண்டிருக்கும் நீர் என்ன துணிவுடன், கிறிஸ்தவ விசுவாசம், கிறிஸ்தவக் கொள்கைகள், ஞானஸ்நானம் என்று என்னிடம் பேசுகிறீர்? நமது ஆண்டவர் சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரியாதா? உனது வலதுகண்ணுக்கு இடறல் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு. உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும் என்பதை நீர்வாசித்ததில்லையா? இந்தப் பெண்ணுடன் இப்படி வாழ்ந்துகொண்டிருக்கும் நீர் உம்மைக் கிறிஸ்தவர் என்று சொல்லிக் கொள்கிறீரா?' என்று பொரிந்தார்.

அதற்கு மேலும் கிளாரிந்தாவால் சும்மா இருக்க முடியவில்லை. ஆத்திரத்தில் குமுறிக்கொண்டிருந்த மிஷனெரியின் பேச்சில் குறிக்கிட்டு, கண்களில் நீர் வழிய, 'கிறிஸ்துவின் அடையாளத்தையும் முத்திரையையும் தேடி, ஒரு சுவிசேஷகராகிய உங்களிடம் வந்த என்னையும் என் கணவரையும் நீங்கள் ஏன் ஐயா அவமானப்படுத்துகிறீர்கள்?

நாங்கள் ஒரே இனத்தவர் இல்லையாயினும் நாங்கள் கணவன்மனைவியர்தாம். காப்டன்ஷெர்கானும் இந்த மோதிரமும் அதற்குச் சாட்சிகள். கடவுளின் பார்வையில் இனம், நிறம் என்ற வேறுபாடுகள் இல்லை. நீங்கள் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு சுவிசேஷகன் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை நாங்கள் கணவன் மனைவி என்பதும். என்னவென்று நினைத்துக்கொண்டு எங்களை அவமானப்படுத்துகிறீர்கள்?' விளக்கத்தை எதிர்பார்த்து நேருக்கு நேராய் சுவார்ட்ஸைப் பார்த்துக் கேட்ட அவள் கண்களில் கோபம் கொப்பளித்தது.

லிட்டில்டன் தலை குனிந்தவாறு உட்கார்ந்திருந்தார். அவர் உள்ளத்தில் கோபமும், அவமானமும், மனவருத்தமும் மாறி மாறிக் கொந்தளித்துக் கொண்டிருந்தன. மிஷனெரி அவரைப் பார்த்து, 'இது என்ன ஐயா, நான் கேள்விப்பட்ட வதந்தியை உமது கடிதமும் உறுதிப்படுத்துகிறது. அப்படியானால் ஒரு பாவம் செய்தது போதாது என்று நீங்கள் இந்த அப்பாவிப் பெண்ணை ஏமாற்றி வேறு வருகிறீரா? சொல்லும், எங்கள் இருவருக்குமே இப்பொழுது விளக்கம் தேவை' என்றார்.

லிட்டில்டனின் பதிலுக்குக் காத்திருந்த இடைவேளையில் கிளாரிந்தாவின் நெஞ்சு அடிப்பது சற்று நின்றுவிட்டது. அவள் அவரை நோக்கினாள். அவள் கண்களைச் சந்திக்கத் துணியாமல் அவர் குனிந்தே இருந்தார்.

வெகுநேரம் கழித்து தடுமாற்றத்துடன்,

'அப்படி இல்லாவிட்டால் இவள் சம்மதித்திருக்கமாட்டாள், நான் இவளை மிகவும் நேசித்தேன்.' பின் சற்று அவசரமாகவும் உற்சாகத்துடனும் தொடர்ந்து, 'ஆனால் என் வில்லங்கம் நீங்கியதும் நான் இவளை முறைப்படித் திருமணம் செய்துகொள்வேன். எந்த நிமிடமும் அந்தச் செய்தி வருமென்று தான் காத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் குற்றம் என்னுடையது தான். நாங்கள் செய்துகொண்ட விசித்திரச் சடங்கு முறையானது என்றும், நாங்கள் கணவன் மனைவியர்தாம் என்றும் இவள் இன்னும் நம்பிக்கொண்டிருக்கிறாள். நான்தான் இவளை ஏமாற்றினேன். குற்றம், அவமானம் எல்லாம் என்னுடையது தான். இவளை ஒன்றும் சொல்லவேண்டாம். இதற்குமேல் நான் என்ன சொல்ல இருக்கிறது. தயவு செய்து என் தவறுக்காக, நீங்கள் இவளுக்கு ஞானஸ்நானம் அளிக்க மறுத்துவிடாதீர்கள். இவள் ஓர் உண்மையான கிறிஸ்தவள். நான் அதைச் சொல்லக்கூடத் தகுதி அற்றவன். இந்த விஷயத்தில் இவள் குற்றமற்றவள். அப்படியே இவளும் என்னுடன் சேர்ந்து குற்றம் இழைத்ததாகவே வைத்துக் கொண்டாலும்கூட நமது இரட்சகரின் மூதாதையரான ராகாப், தாமார் கதையை நினைத்துக்கொள்ளுங்கள்.

**தொடரும் ...**

# பிற சமய சமுதாய மக்களுடன் கிறிஸ்தவர்களின் உறவு

ந. ஜான் ஜெயானந்தம்

**'கூடுமானால் உங்களால் ஆனமட்டும் எல்லா மனிதர்களுடனும் சமாதானமாயிருங்கள்'** ரோமர் 12:18

இன்றைய நாட்களில் பல காரணங்களுக்காக பல இடங்களில் சமயக் கலவரங்கள் எழுகின்றன. அரசியல் கட்சிக் கலவரங்கள், இனக் கலவரங்கள் என இருந்த நிலை மாறி சமய வன்முறைகளும் எழுவது துக்கத்திற்குரியதாக வளர்ந்துவருகிறது. பொதுவாக கிறிஸ்தவ சமயத்தார் இத்தகைய கலவரங்களுக்குக் காரணமாக இல்லாதிருப்பினும், பிற சமயவாதிகளின் வைராக்கியமும் வெறியும் கிறிஸ்தவர்கள் மேலேயே எழுகின்றன.

இத்தகைய கலவரங்களில் பாடு அனுபவிப்பவர்கள் கிறிஸ்தவர்களே ஆவர்.

சில காலங்களுக்கு முன்பு கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் நிமித்தமே கிறிஸ்துவை அறிக்கை செய்பவர்கள் மேல் தீமைகள் விளைவிக்கப்பட்டு வந்தன. ஆனால் இன்றோ, கிறிஸ்தவத்துடன் சம்பந்தப்பட்ட ஆலயங்கள், நிறுவனங்கள் எதுவாயினும், அது கிறிஸ்துவின் பகைஞர்களுக்கு, வெறுப்பையும், குரோதத்தையும் எழுப்பி விடுகிறது.

சென்ற ஆண்டுகளில் குஜராத் மாநிலத்தில் பெரும்பாலும் கடைகளிலும், கடை வீதிகளிலும் டிசம்பர் மாதங்களில் கிறிஸ்துவின் பிறப்போடு சம்பந்தப்பட்ட நட்சத்திரங்கள் மற்றும் சில கிறிஸ்தவ அடையாளங்களை வைத்து விளம்பரம் செய்துவந்த நிலை இருந்துவந்தது. ஆனால் இதற்கு மாறாக, 2022- ஆண்டு முதல் அத்தகைய கிறிஸ்தவ அடையாளங்கள் எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி, காவி வர்ணப் பொருட்கள் வந்துள்ளதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இத்தகைய இன்றைய பின்னணியில், தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வேத வசனமே நமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

**'நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும், (கிறிஸ்துவின் சீடர்களாகிய கிறிஸ்தவர்களும்) உலகத்தாரல்ல. ஆதலால் உலகம் அவர்களைப் பகைக்கிறது.'** யோவான் 17:14.

கர்த்தர் தமது பரிந்துரைக்கும் விண்ணப்பத்தில் இறை தந்தையிடம் இவ்வாறு வேண்டினார். கிறிஸ்தவர்களை உலகம் வெறுக்கிறதற்கான இக்காரணத்தை அவர் மீண்டும் 16-ஆம் வசனத்திலும் கூறுகிறார்.



கிறிஸ்து இவ்வுலகைச் சார்ந்தவராகவும், அவரது அரசு இவ்வுலகத்திற்குரியதாகவும் இருந்திருக்குமேயாகில் (யோவான் 18:36), இத்தகைய பாடுகள் கிறிஸ்துவின் அடியார்களுக்கு நேர்ந்திருக்காது. எனவே, உலகில் எந்த நாட்டில் வாழும் கிறிஸ்தவ விசுவாசிகளாக இருப்பினும், அவர்களுக்கு எதிர்ப்புகள் வராமல் இராது. எனவே, இத்தகைய எதிர்ப்புகளையும், அதன் விளைவாக எழும் தீமைகளையும் கிறிஸ்துவின் அடியார்கள் பொறுமையோடு சகித்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு பிற சமயவாதிகள் நமக்குத் தீமைகளைச் செய்யும்போதோ, அல்லது ஏளனம் செய்து மனவேதனை தரும்போதோ, நாம் பதிலுக்கு ஒன்றும் திருப்பிச் செய்யாமல் அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில், நன்மை செய்யவே நாட வேண்டும். அதற்காக தக்க தருணத்தைத் தரும்படி கர்த்தரிடம் ஜெபிக்க வேண்டும். அத்தகையோர் எவ்வகையிலாகிலும் கிறிஸ்துவிடம் வர வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். **"நீ தீமையினாலே வெல்லப்படாமல் தீமையை நன்மையினாலே வெல்லு"** (ரோமர் 12:21). என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு நல்லாலோசனை வழங்கியிருக்கிறார். இதுவே நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு மிகவும் பிரியமானதாகும்.

**சமயம் சார்ந்த பரீட்சை**

ஒரு கிறிஸ்தவ விசுவாசிக்குத் தனிப்பட்ட வகையில் வரும் பரீட்சைகள் வேறு. (ஆபிரகாம் தன் பிரிய மகனை பலி செலுத்தும்படி வந்த அழைப்பு ஆதி.22 அதி). இவ்வுலகில் வாழும்பொழுது தன் விசுவாச சமயம் சார்ந்த சோதனைகள் வருவது வேறு. பரீட்சை (Test) கர்த்தரால் வருகிறது. சோதனை (Temptation) சாத்தானால் வருகிறது.

தானியேல் பிற சமய மக்கள் வாழும் நாட்டில், ஆட்சியில் உயர்ந்த பதவி வகித்துவந்த ஒரு தலைவர் அவர் தன் பணியில் சத்தியமும், நேர்மையும் பிறழாது தன் கடமைகளை நிறைவேற்றி வந்தார். இத்தகைய சூழலில் தனது விசுவாச

நம்பிக்கையைப் பரீட்சிக்கும் நிகழ்வு எழுந்தது (தானி 6-ஆம் அதி). தனது அனுதின சமய பழக்கத்தைப் பாதிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டது. இத்தகைய சட்டங்கள் கடந்த ஆண்டுகளில் இந்தியா உட்பட ரஷ்யா, சீனா மற்றும் சில முகமதிய ஆட்சியாளர் நாடுகளில் இயற்றப்பட்டிருக்கின்றன. தானியேலின் அனுதின வாழ்க்கையில் இந்தச் சட்டம் எவ்வித மாற்றத்தையும், அசைவையும் ஏற்படுத்தவில்லை (தானி. 6:9-11). விளைவு அவர் சிங்கக் குகையிலே போடப்பட்டார். இருப்பினும் தானியேல் இயற்கைக்கு மாறான ஆச்சரியமான முறையில் பாதுகாக்கப்பட்டார். இத்தகைய அதிசய அனுபவம் இன்று நமக்கு நடைபெறும் என்று எதிர்பார்க்க முடியாது.

இது ஒரு புறமிருக்க, சமயம் சார்ந்த நாட்டுச் சட்டம் இயற்றப்பட்ட பின்னரும் தானியேலின் பதில் என்ன? அவர் உயர் பதவியின் சலுகைகளைப் பயன்படுத்த முயன்றாரா? அல்லது தனது நீதியை நிலைநாட்ட தன் உடன் விசுவாச நண்பர்களை அழைத்தாரா ? இல்லை! எவ்வாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இத்தகைய தீர்ப்பு தனக்கு வழங்கப்பட்டபோது, எதிர் பேசவில்லையோ அல்லது தம் சீடர்களுடன் சேர்ந்து போராடவில்லையோ, (யோவான் 18:16) அதுவே நமக்கும் நல்ல மாதிரியாக இருக்கிறது. கிறிஸ்து செய்தது என்ன ? வேத வசனம் கூறும் தேவ ஆலோசனையின்படி, **'ஏற்ற காலத்திலே கடவுள் உங்களை உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'** (1 பேதுரு 5:3). இவ்வாறே கிறிஸ்துவும் அடங்கியிருந்து அமைதி காத்தார். தீர்க்கன் தானியேல் அன்று செய்ததும் இதுவே ஆம்! நாம் இன்று செய்ய வேண்டுவதும் இதுவே!

## புதிய ஏற்பாட்டு எடுத்துக்காட்டுகள்

இன்னோர் ஒரு எடுத்துக்காட்டை புதிய ஏற்பாட்டிலிருந்து காண்போம். இச்சம்பவம் அப்போஸ்தலர் 19-ஆம் அதிகாரத்தில் பதிவாகியிருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் சிலை வணக்கத்திற்கு விரோதமாக போதிக்கவில்லை. அவர் எல்லா தெய்வங்களுக்கும் மேலாக இருக்கும் விண்ணகக் கடவுளையே பிரசங்கித்தார். அவரது போதனையைக் கேட்டு, சுவிசேஷச் செய்தியை விசுவாசித்தவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்ட நிலையில், தங்களது பழைய வாழ்க்கையில் இருந்த சிலை உருவங்களை விலக்கிவிட்டனர்.

பவுலோ, அல்லது அவருடன் இருந்தவர்களோ, அல்லது பவுல் பிரசங்கித்த சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்தவர்களோ, 'கோவிற் கொள்ளைக்காரரும் அல்ல (தியானாள்) தேவியை நிந்திக்கிறவர்களும் அல்ல' (அப்.19:37) என்றே எபேசு நகரக் கலகத்தின்போது சொல்லப்பட்டது. இவை யாவும் முற்றிலும் உண்மையாயினும் தங்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட இத்தகைய நியாயக்கேட்டுக்கு பவுலும் அவரோடிருந்தவர்களும் கொடுத்த பதில் செயல் என்ன? அவர்கள் தங்கள் இறைப்பணியைத் தொடர்ந்து கொண்டிருந்தனர் (அப். 20:1,2). கர்த்தர் இயேசு தனக்கு விரோதமாக அநியாயத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது எவ்வாறு அமைதி காத்தாரோ அவ்வாறே நாமும் இன்று கிறிஸ்தவர்களுக்கு எதிராக எத்தகைய அநியாயம் செய்யப்பட்டாலும் எதிர் நடவடிக்கை எதையும் எடுக்கக்கூடாது.

இத்தகைய வகையில் நமக்குச் செய்யப்பட்ட வினைகளுக்கு எதிராக நாம் மறியல் செய்வதோ, நீதி மன்றத்தை நாடுவதோ கிறிஸ்தவ பண்பாகாது.

மற்றுமோர் அனுபவத்தைக் காண்போம். இது அக்காலத்தில் பிலிப்பு நகரில் நடைபெற்ற விவரமாகும். பவுல் அப்போஸ்தலன் அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு பெண்ணை சுகப்படுத்தியதின் விளைவாக, மக்கள் அப்போஸ்தலனையும், சீலாவையும் நகர அதிகாரிகளிடம் ஒப்புவித்து, தகுந்த விசாரணை இன்றி, அடித்து குற்றுயிராகச் சிறையில் வைத்தனர். இதற்கு அவ்விருவரும் கொடுத்த பதில் என்ன ? அவர்கள் இரவிலே ஜெபம் செய்து, கடவுளை துதித்துப் பாடினர் (அப். 16:25).

## கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளை என்ன ?

***'உங்கள் விரோதிகளை சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். நீங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் செய்யுங்கள்' (மத். 5:44).***

இறைப்பணியாளர் கிரஹாம் ஸ்டெயின்ஸ் (Graham Staines) மற்றும் அவரின் இரண்டு இளம் மகன்களும் நெருப்பிட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டபோது, வேதனையை அனுபவித்த அவர்களை இழந்த சகோதரி கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் கூறியதென்ன? 'என் கணவரையும், என் இருமகன்களையும் கொலை செய்வதற்குக் காரணமாக இருந்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்பது எனக்கு தூரமாக இருப்பதாக, அவர்கள் மனந்திரும்பி நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.'

இது நமது இந்திய நாட்டில், நம் கண்களுக்கு முன்பாக நமது வாழ்நாட்களில் நடைபெற்ற நிகழ்வாகும். நாமும் இத்தகைய நல்மாதிரியைப் பின்பற்றுவோமாக. இந்த அழகிய வார்த்தைகளை வெளிப்படுத்திய இந்த இறைபக்தியுள்ள மனைவியின் உள்ளத்தையும் பிரியமான தாயின் இருதயத்தையும் அவர்களுடைய உணர்ச்சிகளையும் சிந்திப்பீர்களாயின், இந்தப் பதிலின் ஆழத்தை அறிவீர்கள், வாசக அன்பர்களே! உங்கள் கணவரையும், பிள்ளைகளையும் நினைத்து மனதில் வைத்துக் கொண்டு இந்தப் பதிலுக்கு ஏற்றவாறு நன்மைகளைச் சிந்தியுங்கள். இத்தகைய ஆழ்ந்த உணர்வுகள் இருப்பினும் **'கர்த்தரே அவர்களுக்கு மன்னியும்' 'கர்த்தரே இதற்காக நான் உம்மைத் துதிக்கிறேன்'** என்று கூறுவோமாக.

## வேண்டுவது ஜெபமே!

யோவானின் சகோதரனாகிய யாக்கோபை ஏரோது கொலை செய்தது யூதர்களுக்குப் பிரியமாக இருப்பதை அறிந்த அவன், அப்போஸ்தலன் பேதுருவையும் பிடித்து சிறையில் வைத்தான். அப்பொழுது சபையார் கூடி இதற்காகவே ஜெபித்தனர் (அப்.12:1-5).

சமீபத்தில் தமிழ் நாட்டில் ஒரு சபையார் தங்களது சொந்த இடத்தில் ஆலயம் கட்டி, பழுது பார்க்க எதிர்ப்பு வந்தபோது அந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்பாகச் சபையாராக, ஆண்களும் பெண்களுமாக மூன்று நாட்களுக்கு மேல்

ஜெபித்ததன் விளைவாக தாங்கள் நாடின அனுமதியைப் பெற்றது செய்தித் தாள்களில் வெளிவந்துள்ளது.

**நல்ல வரலாற்று மாதிரிகள்**

தனது ஆழ்ந்த விசுவாசத்துடன் சுவிசேஷத்தை வெளிப்படையாக அறிவித்த அந்நாட்களில் ஜான் பனியன் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்த அந்தக் காலத்தில் தான் கிறிஸ்தவ விசுவாச வாழ்க்கையை உருவகமாகப் படம் பிடித்து, அழகிய ஆங்கில மொழியில் ***"மோட்சப் பயணம்"*** என்ற உருவகமான கற்பனைக் கதையை எழுதி உலகிற்கு வழங்கினார். இந்நூல் நூற்றுக்கணக்கான மொழிகளில், பல பதிப்புகளில் வெளிவந்து அநேகரை கிறிஸ்துவண்டை இன்றும் அழைத்து வந்து கொண்டிருக்கிறது.

***'விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்'*** என்ற வேதாகம உண்மையை எடுத்துரைத்த குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருக்கையில்தான், சீர்திருத்த தந்தை மார்ட்டின் லூதர் வேதாகமத்தை ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்தார். இதுவே பெரியதொரு சீர்திருத்தத்தை கிறிஸ்தவ உலகத்தில் வரவழைத்துள்ளது.

இவ்வாறு மத வன்முறைகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே செல்லலாம். அச்சமயங்களில் கிறிஸ்தவ மக்கள் காண்பித்த அணுகுமுறை, உறவுமுறை தோல்வி அடைந்ததுபோல் காணப்படினும் அதுவே பெரும் வெற்றியாக நின்று, பலரும் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் உந்து சக்தியாக இருந்துள்ளது என்பதை கிறிஸ்தவ சபை வரலாறு உறுதி செய்துள்ளது.

**நம் நாட்டு இன்றைய நிலை**

இந்திய வரலாற்றை நாம் திரும்பிப் பார்க்கையில், இந்தியாவை ஆண்ட முகமதிய அரசர்கள் காலத்தில் அநேகர் வாள்முனையில் அநேகர் முகமதிய சமயத்தைத் தழுவியுள்ளனர். தென் இந்தியாவில் திப்பு சுல்தான் காலத்தில் இம்முறையிலேயே பல தமிழ் மக்கள் தமிழ் பேசும் முகமதியர்களாக மாறியுள்ளனர். இதற்குமாறாக, கிறிஸ்துவின் அன்பின் வெளிப்பாடாகவே பெரும்பாலோனோர் கிறிஸ்தவமார்க்கத்தைத் தழுவியிருக்கின்றனர். இதில் ஒரு சிலர் சுய ஆதாயத்திற்காக வந்தவர்களாக இருப்பினும், சரீர வன்முறை பயன்படுத்தப்படவில்லை என்பதே உண்மை.

2001-ஆம் நூற்றாண்டு துவக்கம் முதல் அகில உலக ரீதியாக கிறிஸ்தவர்கள் மீதும் கிறிஸ்தவ ஆலயங்கள், நிறுவனங்கள் மீதும் பலவித வன்முறைகள் நிகழ்த்தப்படுவது அதிகரித்திருக்கிறது. குறிப்பாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் இது அதிகமாக நடந்து வருகிறது. இதற்கான புள்ளிவிவரங்கள் பல ஊடகங்களில் வெளிவந்துள்ளன. இதற்கு எதிராக பல கிறிஸ்தவ கமிட்டிகளும், அமைப்புகளும் எழுந்து பலவாறு பேசியும் முயற்சித்தும் வருகின்றன. பல தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றனர். இவையாவும் பேச்சளவில் இருந்து வருகிறதேயொழிய, இதற்கு ஓர் தீர்வு காணவில்லை, காணவும் இயலாது.

**ஆவியானவர் பதில் தருவார்**

இன்றைய சூழலில் நமது நாட்டில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக பல குற்றப்பத்திரிகை எழுதப்பட்டு காவல் துறையினரால் தவறான பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இது ஓர் அனுதின நிகழ்வாக நடைபெற்று வரினும், இத்தகைய பல செய்திகளை செய்தித்தாள்களிலும், ஊடகங்களிலும் வெளிவராமல் அதிகார சக்திகள் மறைத்துவிடுகின்றன. இத்தகைய வழக்குகளில் கைதியாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஜாமீனில் வருவது பெரும் சிரமமாகி விடுகிறது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட கிறிஸ்தவ ஊழியர்களும், பிற கிறிஸ்தவ அன்பர்களும் அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறுவதில் சிரமப்படுகின்றனர். இத்தகைய சூழல் கிறிஸ்தவ சீடர்களுக்கு ஏற்படும் என்று அறிந்திருந்த நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து, நமக்கு ஆறுதலாகவும், உற்சாகப்படுத்தும் வகையிலும் மத்தேயு நற்செய்தி நூல் 10-ஆம் அதிகாரம் 18-20 வசனங்களில் கவலைப்பட வேண்டாம் என்றும் அந்நேரங்களில் நாம் எவ்விதம் பதில் கூற வேண்டும் என்று கலங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் கூறியிருக்கிறார். அத்தருணங்களில் கர்த்தர் நமக்கு அருளியிருக்கும் பரிசுத்த ஆவியானவர், நாம் எவ்வாறு பதில் கூற வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய தைரியத்தையும் நமக்குத் தந்தருளுவார் என்றும் வாக்கு அருளியிருக்கிறார்.

இக்கட்டுரையின் ஆசிரியருக்கு நெருக்கமாக இருக்கும் வட இந்தியாவிலுள்ள ஓர் இறைப்பணியாளரும் மற்றும் நான்கு சகோதரர்களும் சமீப காலத்தில் காவல்துறை அதிகாரிகளால் சிறைபிடிக்கப்பட்டனர். அச்சமயத்தில் காவல்துறை அலுவலகத்தில் இருந்த 20-க்கு மேற்பட்ட அதிகாரிகள், மற்றும் பலர் முன்பாக இவ்விறை ஊழியர் கிறிஸ்துவின் தெளிவான சுவிசேஷத்தை சுமார் 10 நிமிடங்களுக்கு மேலாக எடுத்துக் கூறினார். அச்சமயத்தில் அங்கிருந்த போலீஸ் அதிகாரிகள் உட்பட தடை ஒன்றும் செய்யாமல் அமைதியாக நற்செய்தியைக் கேட்டனர். நியாயமான காரணங்களுக்காக இந்த விவரம் பொதுவெளியில் செய்தியாக வெளியிடப்படவில்லை. எதிரிகளின் பாசறையில் கிறிஸ்துவின் இறை செய்தியைத் தெளிவாக அறிவிக்கும் ஓர் அரிய வாய்ப்பு கிடைத்ததற்காக அன்று பிடிபட்டோர் கர்த்தரை வெகுவாகத் துதித்து நன்றி கூறினர். இத்தகைய அனுபவங்கள் இன்றும் நிகழ்கின்றன என்பது நமது விசுவாசத்தை வளர்த்திட வேண்டும்.

யோவான் 17:14 வசனத்தின் அடிப்படையில் இந்த சமயக் கலவரங்களுக்கு ஒரு நிலைவரமானத் தீர்ப்பை ஒருபோதும் காண இயலாது. எனவே, நமது கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து காண்பித்த பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் நாமும் பின்பற்ற வேண்டும்.

நாம் வணங்கி ஆராதிக்கும் கர்த்தரும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவானவர் நமக்கு ஏற்ற உதவிகளைத் தந்து, தமது கிருபையை அளவில்லாமல் பொழிவாராக!

**ந. ஜான் ஜெயானந்தம்**

# தமிழ்ச் சித்தர்களும் கிறிஸ்தவத்தின் தாக்கமும்

Rev. Dr. C.S. அருள்பிரகாஷ்
CSI கோவைத் திருமண்டலம், கோத்தகிரி

தமிழ் இலக்கியங்களில் தனிச் சிறப்புப்பெற்று விளங்குவது சித்தர் இலக்கியங்கள் ஆகும். அவற்றில் பல கிறிஸ்தவக் கோட்பாடுகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளை ஆய்வாளர்கள் முன்னெடுத்துச் சென்று கிறிஸ்தவம் விளிக்கும் மெய் பக்திக் கோட்பாடுகளை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**சித்தர்களின் தோற்றம்**

சித்த மார்க்கம் தமிழகத்தில் தொன்றுதொட்டே இருந்து வருகிறது. அது முதலில் உலகம் முழுவதிலும் பரவி நின்ற மரபு. எனினும் சித்தர்களின் வரலாற்றையும் காலத்தையும் ஊடுருவி அறிய முடியாதபடி ஆய்வாளர்களின் பார்வையை மறைத்துப் பனி மூட்டங்கள் செறிந்திருக்கின்றன. காரணம், நிரூபிக்க முடியாத பகுத்தறிவுக்கு ஒரு சோதனை போல அமைந்த மாயக் கதைகளால் சித்தர்கள் வரலாறு சூழப்பட்டிருக்கிறது. சில சித்தர் பாடல்களில் பிராமண எதிர்ப்புத் தன்மை (Anti Brahmanism) காணப்பட்டதும் ஒரு காரணம். ஏனெனில் கல்வி, கலை, இலக்கியம் போன்றவற்றை நெடுங்காலமாய்ப் பிராமணர்களே தங்கள் வசம் வைத்திருந்தனர். இவர்கள் மற்றவர்களைக் கல்வி பயில அனுமதியாமல் மூடத்தனத்தில் வைத்தனர். இதனால் சித்தர் பாடல்கள் பேணப்படாமலும் சித்தர்களின் வரலாற்றை அறியப்படாமலும் போனதற்கு அவர்கள் பாடல்களில் அமைந்துள்ள வேத வழிபாட்டு எதிர்ப்பும் ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கலாம். தொல்காப்பியர் காலத்திலேயே ஆரியரது வைதீகச் சிந்தனை தமிழ் நாட்டில் நுழையத் தொடங்கி விட்டது. வந்த ஆரியர்கள் மன்னர்களைத் தன் வயப்படுத்திக் கொண்டு, தங்களுடைய கடவுள்களையும், கோட்பாடுகளையும், தங்கள் மொழியையும் மக்களிடையே திணித்தனர். தமிழைக் கற்றுக் கொண்டு தமிழ் ஆசிரியர்களாகவும், சமய ஆசிரியர்களாகவும் இருந்து தங்களுடைய கொள்கைகளை மக்கள் மனதில் விதைத்தார்கள். இதைக் கண்டு கிளர்ந்து எழுந்தவர்களே சித்தர்கள் என்பது துணிபு. எனினும் சித்தர்களின் தோற்றம் பற்றி முடிவுக்கு வர இயலாத ஒரு புதிராகவே காணப்படுகிறது.

**சித்தர்கள் சொல் விளக்கம்**

சித்தர் என்ற சொல்லுக்கு விளக்கம் தர முற்படுகையில், 'சித்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து **'சித்தர்'** என்னும் தமிழ்ச் சொல் தோன்றியுள்ளது. **'சித்தர்'** என்பதற்கு **'சித்தி பெற்றவர்கள்'**, 'சித்தாதிகள்' என்றும் 'சித்தி' என்பதற்கு 'அறிவு', 'சித்தித்தல்' எனவும் 'சித்து' என்பதற்கு 'அரூபம்', 'அறிவு', 'மாய வித்தை' என்று பொருள். இதில் கைகூடுகை என்ற பொருளே பொருத்தமாக உள்ளது.

**'எழிற் பரங் கைகூடப் பெற்றவர் சித்தர்'**

மேலும் சித்தர் என்ற சொல்லின் பொருள் இதுதான் என்று திட்டமாகச் சொல்ல முடியாததாகவே உள்ளது.

**சித்தர்கள் – பொது விளக்கம்**

சித்தர்கள் என்ற சொல்லே ஒருவரையறுக்கப்படாத சொல். அதைப் பல கருத்துக்களை உள்ளடக்கிய சொல் என்று கூறலாம். 'சித்தர்கள் என்றால் **'ஞானத் தீயில் நன்றாக வெந்தவர்கள்'** என்று பொருள்படும். இயேசுவினது நற்செய்தியின் பயனால், திராவிட சமயமாகத் திராவிடப் பண்பாட்டின் அடிப்படையில் எழுந்த வைணவத்தை, ஆரியர்கள் தங்களுக்கு ஏற்றவாறு வளைத்தும், திருத்தியும் ஆரிய வைதீகத்திற்கு அடிமைப்படுத்த முயன்ற போது அதைப் பொறாமல் மறுத்தெழுந்தவர்களே **'சித்தர்'** மரபினர் என்பர். சுருங்கச் சொன்னால் சித்தர்களை ஆன்மீக விஞ்ஞானிகள் என்றே அழைக்கலாம்.

**சித்தர்களின் வாழ்வு**

சித்தர்களின் வாழ்க்கையைப் பற்றி ஆதாரப் பூர்வமான சான்று எதுவும் நமக்கு கிடைக்கவில்லை. அவர்கள் தங்களது பிறப்பு, வளர்ப்பு, பெற்றோர், உடன் பிறந்தோர் என்று யாருடைய குறிப்புகளையும் விட்டுச் செல்லவில்லை. காரணம் தங்களுடைய செய்திகள் மட்டுமே மக்களைச் சென்றடைந்தால் போதும் என்று இருந்துவிட்டார்கள் போலும். பறவைகள், படகுகள் கடந்து செல்லும்போது எந்தச் சுவடுகளையும் விட்டுச் செல்லாதது போல தங்களது சொந்தக் குறிப்புகளை விட்டுச் செல்லவில்லை எனலாம். இதற்கு மேலும் சில காரணங்கள் உண்டு.

**சித்தர்களின் காலம்**

சித்தர்களின் காலத்தை இன்னது தான் என்பதை

உறுதியாகச் சொல்ல இயலவில்லை. ஏனெனில் சித்தர்களைப் பற்றி ஆய்வு செய்த அறிஞர்கள் பலர் தம் நூல்களில் ஒரு நீண்ட பட்டியலைத் தருகின்றனர். தமிழகத்திற்கு வந்த வந்தேரிகளால் வளர்த்த வைதீகத்தின் தீமைகளுக்கு எதிராகப் பெரும் முழக்கமிட்ட சித்தர்களின் காலத்தை கி.பி.15 - 16 ஆம் நூற்றாண்டுகளை ஒட்டிக் கணக்கிடப்படுவது மிகப் பொருத்தமானதாக உள்ளது. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சித்தர்கள், கிறித்தவர்கள், இசுலாமியர்கள், சைவ சமயக் குறவர்கள் சிறப்புடன் நினைவு கூறப்படுகின்றனர். கிறித்தவ, இசுலாமிய சமயங்களின் வருகைக்கு முன்னதாக சித்தர் நெறியைக் கொண்டு செல்ல முடியாது. கிறித்தவமும், இசுலாமும் இங்கிருந்த வேத வழிபாட்டை எதிர்த்தன. அதேவேளை சித்தர்களும் வேத வழிபாட்டுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். சித்தர்களின் இந்த கிளர்ச்சிக்கு கிறித்தவ மற்றும் இசுலாமின் பங்களிப்பும் நிச்சயமாகக் கிடைத்திருந்திருக்கும்.

சிவவாக்கியர் பாடல்களில் கிறித்தவ இசுலாமியச் செல்வாக்கு மலிந்திருக்கிறது. எனவே வைதீகக் கொள்கைகளை எதிர்க்க கிறித்தவ அறிஞர்களுக்கும் சித்தர் பாடல்கள் கருவிகளாகப் பயன்பட்டுள்ளன.

**சித்தர்களின் தொகை**

சித்தர்களின் தொகையை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்க முடியாது. உலகெங்கிலும் சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். 'புத்த மதத்தில் 84 சித்தர்கள் எனவும், வட நாட்டில் நவநாத சித்தர்கள் ஒன்பது பேர் எனவும், தமிழ் நாட்டில் சித்தர்கள் பதினெண்மர் எனக் கூறுவது மரபு. உலகப் பெருஞ் சமயங்களுள் ஒன்றாக விளங்குவது கிறித்தவம் ஆகும். அதனை நிறுவியவர் இயேசு கிறிஸ்து ஆவார். அவர் தாம் வாழ்ந்த காலத்தில் கணக்கில்லா சித்துகளைச் (அற்புதங்களை) செய்துள்ளார். அவற்றை புதிய ஏற்பாட்டில் காணலாம்.

'வணங்குவாய் செக சோதி ஒருவனாகி ...

அன்பான சித்தர்களை இருத்திப் போட்டு

அகண்ட தலம் சென்றவரை அண்டுவாயே' அகத்தியர் ஞானப்பாடல் 23 மேற்கண்ட வரிகள் இயேசு கிறிஸ்துவும் ஒரு ஞானச் சித்தரே என்ற விளக்கம் பெறுகிறது.

**சித்தர் பாடல்களில் பதினெண்மர்**

சித்தர்களின் எண்ணிக்கையைப் பற்றி தாங்கள் இயற்றின பாடல்களிலேயே அவர்கள் பதினெண்மர் என்று குறித்துள்ளனர்.

'பாவென்ற பஞ்சகர்த்தாள் பாதம் போற்றி
பண்பான பதினெண்பேர் பாதம் போற்றி'
'பேரான பதினெட்டுச் சித்த ரெல்லாம்
பிரபலமாய்ப் பரிபாஷை யாகச் சொன்னார்'
'சித்தர் பதினெண்மர் செய்கையிற் றோன்றாத
அத்தனருளும் புசுண்டன் யான்'

மேற்கண்ட சித்தர் பாடல்களில் பதினெண்மர் என்ற சொல்லைத் தவிர அவர்கள் பெயர் இன்னின்னது என்று தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டவில்லை.

**சித்தர்களின் வகைகள்**

சித்தர் மரபினை மூவகையாக ஆய்வாளர்கள் பகுக்கின்றனர். அவை: மூலவர்க்கம், பால வர்க்கம், கைலாய வர்க்கம் என்றும் சித்தர், நாத சித்தர், இரசேசுவர சித்தர் என்ற மூன்று பிரிவினரும் மட்டுமல்லாது வாலை பாகம், வாம பாகம் என்னும் இரு பாகங்களைப் பின்பற்றுபவர்களும் உண்டு.

**குகை இடிக் கலகம்**

உலக வரலாற்றினை கி.மு, கி.பி என பகுத்துப் பல வரலாற்று நிகழ்வுகளை அறிந்த நமக்கு தமிழக வரலாறு பனி மூட்டங்களால் சூழப்பட்டு பல உன்மைகள் மறைக்கப்பட்ட நிலையில் உள்ளன. சுமார் கி.பி 14 ஆம் நூற்றாண்டுகளில் சித்தர்கள் மீது கொடூரமான தாக்குதல் நடத்தப்பட்டுத் தமிழக வரலாற்றிலிருந்து அடியோடு மறைக்கப்பட்ட அந்த இன அழிப்புப் படுகொலையின் பெயருக்கு **'குகை இடிக் கலகம்'** என்று பெயர்.

இடைக்காலத் தமிழர் சமுதாயத்தில், தமிழர்களை அடிமைப்படுத்த ஆரியர்கள் எடுத்த முயற்சிகளின் விளைவாக, ஆரியர்களுக்கு அடிபணிந்தவர்களுக்கு உயர் சாதிப் பட்டமும், அவர்களை எதிர்த்தவர்களுக்குத் தாழ்ந்த சாதி முத்திரையும் கிடைத்தன. சித்தர்கள் ஆரியக் கொள்கைகளை எதிர்த்து நின்ற காரணத்தினால், ஆரியர்களாலும் அவர்களுக்கு அடிபணிந்தவர்களாலும் சித்தர்களை வர்ணாசிரம கொள்கைப்படி தாழ்ந்த (பஞ்சமர்) நிலைக்குத் தள்ளினர். வன்முறைகளை ஆயுதமாகக் கொண்ட ஆரியர்கள் தமிழ்நாட்டில் ஆட்சி செய்து வந்த சிற்றரசர்களை கைவசப்படுத்திக் கொண்டனர். இதனால் தங்களை எதிர்த்தவர்களை அழிப்பது அவர்களுக்கு மிக எளிதாக அமைந்துவிட்டது.

சித்தர்கள் ஆரியக் கொள்கைகளை எதிர்த்ததினால் காடுகளிலும், குகைகளிலும் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சித்தர்களின் செல்வாக்கு மக்களிடையே பெருகிய காரணத்தால் சித்தர்களை அழிக்கும்படியாகப் பிராமணர்கள், தங்களை ஆதரித்த அரசர்களைத் தூண்டிவிட்டனர். பிராமண ஆதரவாளர்கள், சித்தர்கள் வாழ்ந்த குகைகளைத் தேடிச் சென்று அக்குகைகளை இடிக்கவும் அங்கு வாழ்ந்தவர்களைக் கொல்லவும் தொடங்கினர். பிராமண ஆதரவாளர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே நடந்த இக்கலகம் **'குகை இடிக் கலகம்'** என்ற பெயரில் கல்வெட்டுக்களில் சான்றாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

**சித்தர் பாடல்களில் கிறித்தவர்களது ஈர்ப்பு**

கி.பி. முதலாம் நூற்றாண்டில் புனித தோமாவின் வருகைக்குப் பின்னர் பல தமிழ் இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் கிறித்தவத்தின் தாக்குறவு இருந்து வந்துள்ளன. கி.பி 1606 ஆம் ஆண்டில் மதுரைக்கு வந்த திருத்தொண்டர் ராபர்ட் டி நொபிலி தாம் அருட்பணியாற்றிய 50 ஆண்டு காலங்களில் அரிய பல தமிழ் நூல்களை எழுதினார். அவற்றுள் **'ஞான உபதேசம்'** என்னும் நூல் சிறப்பு வாய்ந்தது, அதில் சிவவாக்கியரது பாடல்களை மேற்கோள் காட்டித் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து கி.பி 1710 இல் வீரமாமுனிவர் என்று அழைக்கப்படும் கான்ஸ்டான்டைன் ஜோசப் பெஸ்கி தமிழ்மொழி வளர்ச்சிக்கு சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். 23 நூல்களைத் தமிழில் செய்துள்ளார், அவற்றுள் சித்த மருத்துவத் துறையில் தமக்கிருந்த ஈடுபாட்டினால் 15 சித்த

மருத்துவ நூல்களைச் செய்துள்ளார்.

கி.பி.1774 - 1864 ஆம் நூற்றாண்டில் தஞ்சை மன்னர் இரண்டாம் சரபோஜி அவர்களின் அரசவைப் புலவராக இருந்த 'சுவிசேடக் கவிராயர்' என்று போற்றுதலுக்கு உரியவராக வாழ்ந்த 'வேதநாயகம் சாஸ்திரியார்' அவர்கள் பாம்பாட்டிச் சித்தர், ஞானவெட்டியான், கடுவெளிச் சித்தர் போன்றவர்களின் பாடல்களைத் தழுவிப் பல கிறித்தவக் கீர்த்தனைகளைப் படைத்துள்ளார். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹென்றி மார்ட்டின், ஸ்கடர் போன்ற பல கிறித்தவ அருட்பணியாளர்கள் தாம் வெளியிட்ட சிறு நூல்கள் வரிசையிலும், துண்டுப் பிரதிகளிலும் பல சித்தர் பாடல்களை மேற்கோள் காட்டியுள்ளனர். தற்காலச் சித்தர் பாடல்கள் அடங்கிய தொகுப்புகளில் அதே பாடல்கள் பல மாற்றங்களுடன் காணப்படுகிறது.

பல ஆண்டுகளாக தமிழகத்தில் வாழ்ந்த கிறித்தவ அருட்பணியாளர்களும் பிற கிறித்தவ அன்பர்களும் சித்தர் பாடல்களின் பேரில் தனியாத தாகம் கொண்டிருந்தனர். மேலும் சித்தர் சிவவாக்கியரது பாடல்களைச் சைவர்கள் எரித்தபோது கிறித்தவர்களே அதைக் காப்பாற்றி வைத்ததாக வரலாற்று ஆதாரங்கள் வழியாகக் (Kamil V. Zvelebil, The Poets of Powers, Pp.19-20) காண முடிகிறது. இதன் மூலமாக சைவர்களுக்கும் சித்தர்களுக்கும் இடையே பகைமை நிலவி வந்து இருப்பதாகத் தெரிகிறது.

சித்தர் நெறி இங்கேயே வைதீக கொள்கைகளுக்கு அடங்காமல் வளர்ந்தது. **'வைதீகத்துடன் சித்தநெறி'** நடத்திய போருக்கு கிறித்தவ, இசுலாமியச் சமயங்களின் ஆதரவு நிச்சயமாய் அதற்கு கிடைத்திருக்கும் என ஜே.என். ஃபார்குகர் குறிப்பிடுவர். மேலும் 'சித்தர்கள்' என்போர் புதுக்கால சமயக் குழுவினர். இசுலாமியர்களோ அல்லது கிறித்தவர்களோ தான் சித்தர்கள் மேற்கொண்டிருந்த சமயத்தைப் போதித்திருக்க வேண்டுமென ஹாப்கின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

### கிறித்தவமும் சித்தர்களும்

கி.பி. 52 இல் தமிழகத்திற்கு வந்த புனித தோமாவின் நற்செய்தியின் மூலம் அகத்தியர் இயேசு பெருமானை அறிந்தார் என அறிஞர்கள் குறிப்பிடுவர். மேலும் அகத்தியர் பதினெண் சித்தர்களுக்குச் சமகாலத்தவராக அவர்களுள் பலரை அறிந்தவராகவும் தோன்றுகிறது. சித்தர் வரிசையில் அகத்தியருக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆழ்ந்த ஆன்மீக கருத்துகளைச் சித்தர் பாடல்கள் எடுத்து ஓதுகின்றன.

*'கட்டினான் என்சீடன் சுந்தரனோ வென்றால்*
*கலைஞானம் பார்த்திருந்தும் கபடாய்த் தானே*
*கொட்டினான் பல நூலை வெளியில் போட்டுக்*
*கோபத்தால் முன்னூலை கொலைத்துப் போட்டான்*
*கட்டியதோர் கொங்கணவன் சொன்ன நூறான்*
*கஞ்சாவின் மயக்கமடா! கருதியே தான்*
*எட்டினான் தேரையனும் சொன்ன ஞானம்*
*ஏட்டில் ஒன்று திட்டமதாய் இயம்பினானே! '*

மேற்கண்ட அகத்தியர் ஞானப்பாடலின் விளக்கமாவது அகத்தியரின் சீடர்களுள் ஒருவர் சுந்தரன். இவர் தம் குருவான அகத்தியருக்கு மெய்யான சீடனாக இருக்கவில்லை. இவர் உண்மையற்ற மனமுடையோராய் இருந்து அகத்தியர் எழுதிய பல நூல்களை பொறாமையால் அழித்துவிட்டார். எனவே அகத்தியர் தனது முன்னூலைக் குலைத்துப் போட்டதையும் இங்கு குறிப்பிடுகிறார். முன்னூல் இது என்ன நூல் என்று வெளிப்படையாக சொல்லப்படவில்லை. ஆனால் அவை மெய்ப்பொருளுக்குத் துணை செய்யக் கூடியதாகவே இருந்திருக்க வேண்டும் என்பது வெள்ளிடைமலை. இக்கருத்துகளின் அடிப்படையில் அகத்தியருடைய சீடன் சுந்தரன் அழித்த முன்னூல் அல்லது நூல்கள் அகத்தியர் மெய்ப்பொருள் காண்பதற்கு துணை செய்த பழங்காலக் கிறித்தவ தமிழ் இலக்கியங்களே.

அதுபோலவே "போகர் - 7000" என்னும் நூலில் தான் வடிவமைத்த வான் ரதத்தைக் கொண்டு எகிப்து, ரோமாபுரி, சீனா, மெக்கா, எருசலேம் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்ததாக போகர் குறிப்பிடுகிறார். அவ்வாறு சுற்றி வருகையில் (பாடல். 2214, 2215) ரோமாபுரியில் இவர் இசுரயேலர்களின் சமாதிகளைக் கண்டுள்ளார்.

*'கோடிபேர் சமாதிநிலை தன்னைக்கண்டேன்*
*கொற்றவனாம் ரோமபுரி சமாதியோரம்*
*தேடியே பார்க்கவென்று போகும் போது*
*தேர்வேந்தராசரப்பா யிசுரவேலர்...'* (2218)

மேற்கண்ட போகர் பாடல் இசுரயேலரை 'தேர்வேந்தர்கள்' என்று கூறுவதைப் பார்த்தால் பிரசித்திபெற்ற சாரட்கள் ரோமபுரி மன்னர்கள் வசம் இருந்ததாம். கி.மு. 2000 - கி.மு. 500 வரை ரோம் மற்றும் பல மத்தியத் தரைக்கடல் தேசங்களில் 'சாரட் படை' முக்கியத்துவத்தோடு இருந்தது என்று வரலாற்று நிகழ்வுகளைக் கூறுகிறார்.

'பானான குருபரனை வணங்கியானும்
பார்க்கவே எருசலேம் போகவென்று
மானான மாதாவைக் காணவென்று
வணங்கினே னவர்பாதம் தொழுதிட்டேனே' (2221)
'என்னவே யேசுவின்தன் மகிமைமெத்த
எடுத்துரைத்தார் சீசர்வர்க்க மனேகம்பேர்' (2219)

மேலும் போகரின் பாடல் வரிகள் பின்வருமாறு மேற்கோளிட்டுக் கூறுகின்றது.

'இறங்கினேன் ராசரிட சமாதிகண்டேன்
எழிலான ஏசுவின்றன் சீடர் கண்டேன்
சுறங்கமுடன் இம்மான்வேல் சமாதி கண்டேன்
சுத்தனாம் பரிசுத்தர் சமாதி கண்டேன்
வரங்கொடுக்கும் இசுரவேல் சமாதிகண்டேன்
வளமுடனே ரோமாபுரிதேசத்தார்கள்
திறமுடனே ரோமாபுரிக் கோட்டைக்குள்ளே
போகுவதும் வருகுவதும் கண்டேன் தானே!'
'திண்ணமாய் எகிப்பத்து தேசங்கண்டேன்
திடமுள்ள மாதாவின் தேசம்போனேன்
வண்ணமுடன் யூதாவில் கோடானகோடி

வனந்தனிலே ரிஷிகளப்பா சொல்லொணாது
என்னவே ஏசுவின்தன் மகிமைமெத்த
எடுத்துரைத்தார் சீசர்வர்க்க மனேகம்பேர்கள்
சன்னமுடன் மலையெல்லாஞ்சுற்றி வந்தேன்
சாங்கமுடன் ஈசாக்கு சமாதியுண்டு'
'காட்டிவந்தேன் சீனாபதி தன்னில் சென்றேன்
கடவுளாம் ஏசுவின்றன் காட்சிகண்டேன்'

(போகர். 7000)

மேற்காணும் பாடல் வரிகள் போகர் தாம் இருந்த இடத்தில் இருந்து கொண்டே எருசலேமுக்கும் மெக்காவுக்கும் சென்று அரிய காட்சிகளைக் கண்டு மீண்டதாக அவரே சொல்லுகிறார். மேலும் அவர் எகிப்திய அரசர்களின் சமாதிகளைக் கண்டதாகவும், இயேசுவின் சீடர்கள் மற்றும் இம்மானுவேலரின் சமாதி முதலியவற்றை தம் நிட்டை நிலையிலேயே கண்டதாகவும் கூறுகிறார். இதன் மூலமாகச் சித்தர் பாடல்களுக்கும் விவிலியத்திற்கும் நெருங்கிய தாக்குறவு இருப்பதை நாம் அறியத் தருகிறது.

சித்தர் பாடல்கள் மட்டுமின்றி தமிழகத்தில் பக்தி இயக்கத்தின் வழி தோன்றிய சைவ சித்தாந்தத்தில் கிறித்தவம் கூறும் அன்பும் வைணவத்தில் கிறித்தவத்தின் உயிர் நாடியாக இலங்கும் மீட்பு பற்றிய கோட்பாடுகளும் காணப்படுகிறது. மேலும் பல தமிழ் இலக்கியங்களில் விவிலியக் கொள்கைகள் கலந்துள்ளன.

**கால ஒற்றுமை**

கிறித்தவம் முதல் நூற்றாண்டில் புனித தோமையார் மூலம் பரவி, தமிழ் இலக்கியங்கள், சைவ சித்தாந்தம், வைணவம் போன்றவற்றில் தாக்குறவு பெற்றிருந்த போதிலும் அது கி.பி. 15,16 ஆம் நூற்றண்டில் தான் முழு வடிவம் பெற்றுப் பரவியது. கி.பி 5 ஆம் நூற்றாண்டு வாக்கிலே திருமூலரை முதல் சித்தராக கொண்டு சித்தர்களின் வரலாற்றை எழுத முற்பட்டாலும், சித்தரியல் அறிஞர்களின் கருத்துப்படி காலைக் கதிரவனைப் போலச் சித்தர் நெறி எழுந்தது கி.பி. 15, 16 நூற்றாண்டு ஆகும் என்பர். சித்தர் பாடல்களில் காணப்படும் சொல்வளம், மொழி ஆளுமை ஆகியவற்றின் அடித்தளத்தில் காணும் போது சித்தர்களது காலத்தை 15 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் எடுத்துச் செல்ல இயலாது என அறிஞர்கள் கருதுகின்றனர். இதிலிருந்து சித்தர் பாடல்களில் கிறித்தவக் கருத்தாக்கம் புதைந்து இருப்பது வெளிச்சமாகிறது.

கிறிஸ்தவர்களின் இறை, இலக்கியச் சிந்தனைகளுக்கும் தமிழ்ச் சித்தர்களின் இலக்கியங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளன. சித்தர்களும் தங்களது அறிவுத் தேடலில் பராபரனாகிய கிறிஸ்துவின் ஒளியைக் கண்டுள்ளனர் என்பது தெளிவு. சில சுயநலக் கயவர்கள் திட்டமிட்டே இக்கருத்துகளை மறைத்துள்ளனர். இதைத் தொடர் ஆய்வுகள் செய்யும் பொழுது இன்னும் பல விரிவான உண்மைகளை வெளிக் கொணர முடியும். அவைகளைக் கண்டு வரலாற்றில் பதிவது நமது முக்கியப் பணியாகும்.

**பின் குறிப்பு;** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூரில் மெய்யியலில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இக்கட்டுரையாளர் மண வாழ்வு 'முறிவு' ஆற்றுப்பணி என்ற நூலினை வெளியிட்டு, தற்பொழுது விவிலிய அழகியல் குறித்து ஆராய்ந்து வருகிறார்.


கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
| --- | --- |
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்

ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com

10 அத்தியாயம்

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர்.த.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர், திருநெல்வேலி
jansy.emmima@gmail.com
+91 73971 56808

யார் வேலையிது... என்ன நடந்தது...? எங்கே முத்தம்மாள்?

வீடு, கிணறுகள், ஆறு, குளம்... என்று டோனாவூரின் மூலை முடுக்குகளெல்லாம் ஒன்று விடாமல் தேடியாகிற்று.

முத்தம்மாளை காணவில்லை.!

நான் யாரிடம் என்ன பதில் சொல்வேன்...? உவாக்கரின் மனைவியின் மடியில் தலைவைத்து அழுது புலம்பினார் ஏமி. பர்தாவால் பதிலுக்கு கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறெதுவும் சொல்ல முடியாமல் தவித்தார்.

இங்கு தான் எங்காவது போயிருப்பாள் இரவில் வந்து விடுவாள் ஏமி. அழாதே... என்றார் உவாக்கர்.

இல்லை, அண்ணன்... அவள் சித்தப்பன் தான் ஆள்வைத்துக் கடத்தி போயிருப்பான் என்று தோன்றுகிறது எனக்கு.

ஏன் அவன் கடத்த வேண்டும் ஏமி.? தீர்ப்பு தான் அவன் பக்கம் சாதகமாக வந்து விட்ட நிலையில் அவன் கடத்திச் செல்ல அவசியமில்லை. நாளை அவளை அழைத்துச் செல்ல அவன் இங்கு வர இருக்கிறானே.!?

ஆமாம், அதை நினைத்தால் அதிகம் கவலையாக இருக்கிறது. இப்போது என்ன செய்வது...!?

பர்தா பதற்றத்தோடு எழுந்து வெளியே எட்டிப் பார்த்தார். உவாக்கரின் உள்ளூர் நண்பர்கள் சிலர் நடந்தவற்றை கேள்விப்பட்டு வந்து கொண்டிருந்தனர்.

முத்தம்மாளைப் பற்றின எல்லா விசயங்களையும் அவ்வப்போது இவர்களிடம் சொல்லி வந்திருந்தார் உவாக்கர். அவர்கள் அடிக்கடி மாலை நேரங்களில் உவாக்கரோடு ஊரில் நடப்பவற்றை நட்பாகப் பேசி, கதையாடிப் போக வருபவர்கள். அன்று முத்தம்மாள் பற்றின உண்மை நிலமையை விசாரிக்க வந்திருந்தனர்.

வாருங்கள் நண்பர்களே...!

என்ன நடந்தது. முத்தம்மாள் விபரம் அறியாத பெண் இல்லை. இங்குதான் எங்கேயாவதி போயிருப்பாள். வேறெங்கும் சென்றிருக்க வாய்ப்பில்லை. என்றார் கிராமத் தலைவர் மூர்த்தி. கேள்விப்பட்டதும் நம்ம ஆட்களை வைத்து தேடச் சொல்லியிருக்கிறோம் ஐயா. அதோட நம்ம தம்பி ராமசாமியையும் அவனது கூட்டாளிகள் மூன்றுபேரையும் முத்தம்மாளின் ஊர்பக்கம் போய் அங்கு யாரும் அவளை இழுத்துட்டு போயிருப்பாங்களான்னு ஊருக்கு தெரியாமல் வேவு பார்த்திட்டு வர சொல்லி அனுப்பியிருக்கோம் ஐயா என்றார் அவர். உவாக்கர் எழுந்து நின்று அவரது கையைக் குலுக்கி அணைத்து அன்பைத் தெரிவித்தார். எங்களுக்கு நீங்கள் அனைவரும் தரும் அளவுகடந்த அன்பிற்கு ஈடாக நான் எதைச் செய்யப் போகிறேன். கடவுள் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக என்றார்.

அம்மா, கவலையை விடுங்கம்மா நாங்கல்லாம் இருக்கும்போது ஏன் இப்படி கவலைப்படுகிறீர்கள். விடியும் முன் முத்தம்மாள் எங்கிருந்தாலும் வந்துவிடுவாள் என்றார் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர்.

இவர் உவாக்கரின் தமிழ் உரையை கேட்பதற்காகவே ஆலய வளாகத்திற்குள் அடிக்கடி வந்து போவார். கொஞ்சம் கம்பராமாயணத்தை செவிவழியாக தெரிந்து வைத்திருப்பவர்.

உவாக்கர் கம்பராமாயணத்தில் கற்றுக் கரைகண்டவர். அவரோடு அதைக் குறித்து, தான் அறிந்தவற்றை பேசி மகிழ்வதில் அந்தப் பெரியவருக்கு அளவில்லா ஆனந்தம். டோனாவூருக்கு உவாக்கர் வரும் வரை அவர்தான் கம்பராக வலம் வந்தவர். உவாக்கர் அவ்வப்போது பொது மக்களிடம் பேசும் போது அவர்கள் அறிந்திருந்த கம்பராமாயணத்தில் இருந்தே உதாரணங்கள் எடுத்துக்

காட்டி பேசுபவர். திருநெல்வேலியில் உவாக்கரின் தமிழ் உரையாற்றலைக் கேட்க, கற்றுத் தேர்ந்த பண்டிதர்களும் சமய வேறுபாடுகளைக் கடந்து பேராவலோடு வருவது வழக்கம்.

உவாக்கர் ராமாயாண கதைகளுக்கு அவ்வப்போது அளித்த விளக்க உரைக்கு பிறகுதான் டோனாவூர் கம்பர் ஐயாவிற்கு தான் அவிழ்த்துவிட்ட ராமாயாண கதைகளில் தனது கற்பனைகள் அதிகளவில் கலந்திருப்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் அத்தகைய கதைகள் மீது அந்தப் பெரியவரின் அளவற்ற ஆர்வம் தான் அதற்கு காரணம் என்பதை உவாக்கர் நன்கு அறிந்து அவர்மீது உவாக்கர் தனி அன்பு செலுத்தி அவரது சந்தேகங்களுக்கு சலிப்பின்றி விளக்கமளிப்பார். ஆனால் எதெற்கெடுத்தாலும் ராமாயாணத்தையே உதாரணமாக்கி பேசும் அவரது பேச்சு சில பெரிசுகளுக்கு ஏதோ படித்திருக்கிறார் என்று மதிக்க வைத்தாலும் இளசுகள் தொடங்கிட்டாருய்யா வாங்கடே போயிருவோம் என்ற கேலிப் பேச்சுக்கு அளவேயிராது. அதற்கெல்லாம் அந்த டோனாவூர் கம்பர் கவலை பட்டதேயில்லை. ஏதோ தன் மீதான பொறாமையால் கேலி செய்வதாக தன்னைத் தேற்றிக்கொண்டு தனது ராமாயாண விளக்கத்தை தொடர்ந்து செய்து கொண்டு தான் இருந்தார்.

ஏமி அம்மா, அந்த சீத்தாபிராட்டியை கடத்திட்டுப் போனான் இராவணன். தொலைஞ்சே போய்டாளா சீத்தா? கிடைச்சிடுவாள்... கவலையை விட்டுத் தள்ளுங்கோ... தாயீ.. என்றதும் தயிர்ப் பானைக்குள் தவறி விழுந்த பெருந்தவளையைப் போல் கொல் என்ற சிரிப்பு! அனைவரும் சற்று முகம் மலர...

நான் நம் பிள்ளைகளோடு அவள் வந்து சேரும் வரை செபம் செய்ய போகிறேன், நீங்க எல்லோரும் இருந்து பேசிக் கொண்டிருங்கள் என்று வெளியேறினார். ஏமி கூடவே பர்தாவும் சென்றார்.

நான் நம்பிக்கையோடுதான் இருக்கிறேன். ஆனா நாளை காலை அவள் சித்தப்பனையும் அம்மாவையும் நினைத்தால் தான்.... என்றார் உவாக்கர். ஏமி வெளியேறவும் வந்தவர்கள் உவாக்கரை சுற்றி அமர.. பேச்சு தொடர்ந்தது.

நடு இரவில், முத்தம்மாளைத் தேடி அவளது ஊருக்குச் சென்ற ராமசாமியும் நண்பர்களும் திரும்பி வந்தனர். ஐயா முத்தம்மாள் பற்றி எந்தப் பேச்சும் அந்த ஊரில் இல்லை. ஆனால் ஒரு செய்தி மட்டும் அடிபடுகிறது.

முத்தம்மாளுக்கு அடுத்தவாரமே செங்கப்ப பண்ணையார் மகன் இளையவனோடு கல்யாண ஏற்பாடாம். நம்ம குருசாமியின் சித்தி வீட்டு பக்கத்து வீடுதான் அந்தப் பண்ணையார் வீடும். அங்கு தான் போய்ட்டு, வழி போக்கா வந்ததாக காட்டிக் கொண்டு திரும்பினோம் அய்யா என்றான் ராமசாமி.

சரி சரி.... எல்லாம் நல்லபடியாக நடக்கும். வெள்ளனயே நாங்க வாறோம் ஐயா. எது வந்தாலும் நாங்க பார்த்துக்கிறோம். நீங்க படுத்து உறங்குங்க என்றவர்கள் வெளியே நடந்தனர்.

அந்தக் காப்பகத்தில் குழந்தைகளைத் தவிர வேறு யாருக்கும் உறக்கம் வரவே இல்லை. முழு இரவும் இறை வேண்டுதலில் மூழ்கியிருந்தனர். அதிகாலை நான்கு மணிக்கு ஏமி பொன்னம்மாளுடன் உவாக்கர் தம்பதி தங்கியிருந்த அறைக்கு வந்தார்.

உவாக்கர் லாந்தர் விளக்கொளியில் விவிலியத்தை திருப்பிக் கொண்டிருக்க, பர்தா சமையலறையில் டீ தயாரிப்பது தெரிந்தது. ஏமியின் வருகைக்காகவே காத்திருந்ததை போல் கதவைத் திறந்தார் உவாக்கர்.

வா....ஏமி கவலைப்படாதே, எங்கிருந்தாலும் முத்தம்மாள் கடவுளின் கையில் பத்திரமாகதான் இருப்பாள் என்றார். எந்தப் பதிலும் கூறாமல் அமைதியாக நாற்காலியில் வந்து அமர்ந்தார் ஏமி.

ஏமி, இந்தா டீ குடி. உவாக்கருக்கு கொண்டு வந்ததை ஏமியிடம் நீட்டினார் பர்தா. அழுது, அழுது.. தூங்காத ஏமியின் முகம் வீங்கியிருந்தது.

ஏமி, இங்க பாரேன், உவாக்கர் மீண்டும் அழைத்தார். ம்....என்றார் ஏமி நிமிராமலே. பர்தா டீயை ஏமியின் வாயருகில் கொண்டு சென்று குடிக்கும்படி கெஞ்சினார். ஏமி துக்கத்தை விழுங்கி கண்ணீரை தாரைத் தாரையாக வடித்தார்.

ஏமி, நாங்கள் இருக்கும்போது நீ மட்டும் தனியாக இருப்பதை போல் நினைத்து ஏன் இந்த அளவு கலங்குகிறாய்.? இது உனது பிரச்சனை மட்டும் என்று நீ நினைப்பதால் தான் இந்த அளவு துக்கம் அடைகிறாய் என்றார்.

இல்லை அண்ணன். நான் இதைப் பிரச்சனையாக மட்டும் நினைத்தால் இப்படி கவலையடையமாட்டேன். என்னை அம்மா, அம்மா என்று வாய் நிறைய அழைக்கும் எனது மகள் எங்கோ மறைந்து விட்டதை எண்ணும் போது தான் என்னால் சகிக்கவே முடியவில்லை... துக்கம் தொண்டையை அடைத்து கண்ணீரை கக்கியது.

அவள் எங்கு போய்விட முடியும் ஏமி.? உன் மீது அவளும் அளவற்ற அன்பை வைத்திருந்தாள் தானே? அதனால் தானே தீர்ப்பு அவள் தாயோடுதான் இருக்க வேண்டும் என்று வந்த பிறகும் உன்னைதானே தாயாக நினைத்து உன்னோடு வந்தாள். பிறகு எப்படி உன்னைவிட்டு மறைவாள்.

அதுதான் எனக்கும் கவலை. அவளாக என்னைவிட்டு போக மாட்டாள். வேறு யாரோ.... அல்லது.... மரணம்.... என்று... ஏமி முகத்தை கைகளால் மூடியபடி அழுததை இருவராலும் தாங்கவே முடியாமல், ஏமி, அழாதே. உன் முத்தம்மா எங்கும்போகவில்லை.

அழாதே... அழாதே.... அவள் பத்திரமாகத்தான் இருக்கிறாள். நம்பு என்று ஏமியின் முகத்தை தனது இரு கைகளாலும் ஏந்தினார் பர்தா. பர்தாவின் பேச்சில் இருந்த அந்த உறுதி ஏமிக்குள்ளிருந்த உயிர் துளிர்த்ததைப் போல இருந்தது.

என்ன சொல்கிறாய் பர்தா? எங்கே என் முத்தம்மா...என்ன சொல்கிறாய் ?

ஆம் ஏமி முத்தம்மாள் இப்போது பாதுகாப்பாக இலங்கையில் இருக்கிறாள்.

என்னது... இது உண்மையா... எப்படி.?

ஏமி, எனக்கென்னவோ மீண்டும் தீர்ப்பு நமக்கு சாதகமாக வராது என்றே தோன்றியது. அதனால் முத்தம்மாளின் எதிர்காலம் இருண்டு போகும் என்பதும் நிச்சயம். எனவே, சென்ற வாரம் திங்கட்கிழமை கோர்ட்டுக்குப் போகும் முன்பே நான் சில திட்டங்களை வகுத்திருந்தேன். அதன்படி நமது பிரான்சி ஸ்பீத், அவளது சகோதரி மேபல் மற்றும் ஹாண்ட்லி ஆகியோருடைய உதவியோடு உடனடியாக செயல்படுத்த வேண்டியதாயிற்று. என்றார் உவாக்கர்.

இதை எனக்குத் தெரியாமல் எப்படி? என்று...சற்று கடுமையானார்.

ஏமி, நீ இதற்கு சம்மதிக்க மாட்டாய் என்று எனக்குத் தெரியும். உண்மையாகவே சொல்கிறேன். அவளைக் காப்பாற்ற எனக்கு வேறு வழி தெரியவே இல்லை. என் மனைவியிடம் கூட நான் இதைச் சொல்லவில்லை. நீ இங்கு வருவதற்கு சற்று முன்புதான் அவளிடமும் கூறினேன்.

இதற்குள் அவள் எப்படியும் இலங்கையை அடைந்திருக்க வேண்டும்... என்றவர் சுவர் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார்.

உடன் சென்றிருப்பது யார்? ஹாண்ட்லியும், மேபலும். மேபல் இங்கிலாந்திலிருந்து ஏமியோடு செவிலியராக பணியாற்ற வந்திருந்த பிரான்சிசுடைய தங்கை. சகோதரியைப் பார்க்கவும் இந்தியாவில் நடக்கும் இந்த விசித்திரங்களை அறிந்து ஏமியின் குழந்தைகள் காப்பகத்தைப் பார்த்துப் போகவும் வந்திருந்தாள்.

ஏமி முதலில் 1843 ஆம் ஆண்டு ஜப்பானில் சமயப்பணி செய்ய சென்றிருந்தார். ஆனால் அங்கிருந்த காலநிலை அவருக்கு கொஞ்சமும் ஒத்துக்கொள்ளாமல் போக, திரும்பவும் தனது நாட்டிற்கே செல்ல கப்பலேறினார். ஆனால் தனது நாட்டிற்கு திரும்பிச் செல்ல விருப்பம் இல்லாமல் இடையில் இலங்கையில் இறங்கி அங்கே சூழல் ஒத்துக்கொண்டால் சமயப் பணியைத் தொடரலாம் என எண்ணினார். அங்கு பெற்றோரை இழந்து தனியாக வாழ்ந்து வந்த மேரி, எலிசபத் என்ற இரு சகோதரிகள் ஏமியை ஏற்றுக்கொண்டு அவரோடு சேர்ந்து சமயப்பணி செய்தனர். ஆனால் அங்கும் ஏமியால் ஒரு மாதத்திற்குமேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. உடல்நிலை மேலும் மோசமடைந்தது. எனவே மீண்டும் தனது நாட்டிற்கே செல்ல வேண்டியதானது.

இலங்கை அனுபவத்தைப் பற்றி ஏமி கூறும் போதெல்லாம் அந்த மேரி, எலிசபத் என்ற இருவரின் அன்பையும் கரிசனையையும் பற்றி அடிக்கடி கூறி நெகிழ்வார். அவர்களை எப்படியாவது மீண்டும் சென்று பார்த்து வர வேண்டும் என்ற ஆசையை உவாக்கர் தம்பதியினரிடம் அடிக்கடிக் கூறியிருக்கிறார். அது தான் உவாக்கரை முத்தமாளை காப்பாற்றுவதற்கான சரியான இடமாக உணர வைத்தது.

ஏமி, உனது அன்பு தோழிகளோடு தான் முத்தம்மாள் பத்திரமாக இருக்கிறாள்.

திரு.ஹாண்ட்லி அதே இங்கிலாந்திலிருந்து வந்த மருத்துவ உதவியாளர். இருவரும் கணவன் மனைவியாக தங்களைக் காட்டிக்கொண்டு முத்தம்மாளை இலங்கைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

ஏமி உவாக்கர் சொல்வதையெல்லாம் மெய்மறந்து ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தவர். முத்தம்மாள் உயிருடன் இருப்பதை அறிந்து முகம் மலர்ந்து வாயில் கைவைத்து கொல் என்று சிரித்தார் குழந்தையைப் போல. ஒரே நொடியில் மூவர் முகத்திலும் ஒட்டியிருந்த இருட்டை சாத்தியிருந்த சன்னல் கதவுகள் காற்றில் அசைந்து விடியலின் மெல்லிய வெளிச்சத்தை உள்ளே அனுப்பி துரத்தியது.

முத்தம்மாள்... நமது முத்தம்மாள் இனி நிரந்தரமாக நமக்கானவள் என்று மகிழ்ச்சி பொங்க கூறியவர் சட்டென முழங்காலில் நின்று ஓ என் கடவுளே, உமக்கு நன்றி, நன்றி, நன்றி... என்று கண்ணீர் விட்டு போற்றினாள். மூவரும் ஆனந்த கண்ணீரைக் காணிக்கையாக்கினர் கடவுளுக்கு. வெளியே இரவில் விடைபெற்று சென்ற நண்பர்கள் வந்து கொண்டிருந்தனர்.

வாருங்கள் நண்பர்களே, ஆபத்தில் அனைவரும் எங்களுக்குத் தரும் இந்த ஆதரவு மிகவும் ஆறுதலாக உள்ளது என்றார் கைக்கூப்பியவாறு.

அதற்கென்ன...ஐயா. நீங்க என்ன தப்பா செய்றீங்க.!? நல்லது செய்வதற்கு ஒத்தாசை செய்தா எங்களுக்கும் புண்ணியம் தானே. என்ற ராமசாமி, அம்மா முகத்தில் லேசா சந்தோசம் தெரியுதே, சொல்லி விட்டீர்களா ஐயா? என்றான் .

ம்... தலையசைத்தார் உவாக்கர்.

சரி, இனி இன்று அந்த முத்தம்மாள் ஊர்காரனான பண்ணையாரை சமாளிக்கணும். என்ன செய்வான் பார்ப்போம்...வரட்டும். இசக்கியப்பன் அசால்ட்டாக சொல்லிவிட்டு, ராமசாமியை பார்த்தான்.

ஐயா, நாங்க ஒரு திட்டம் வைத்திருக்கிறோம். ஆனா அதை நீங்க ஏத்துக்க மாட்டீங்கன்னு தெரியும் என்று தலையை சொறிந்தான் ராமசாமி. சொல்லு ராமசாமி, உவாக்கர் ஆர்வமாக கேட்டார். ஐயா, அவுங்க இங்க வருவதற்குள்ள நாம அங்க அவர்கள் ஊருக்குள்ள நம்ம ஆட்களோடு போயாகணும்.

நீ என்ன சொல்கிறாய் ராமசாமி?

ஆமாய்யா, இந்த ஒரு விசயத்தை செய்ய நீங்க ஒத்துழைத்தே ஆகணும். வேற வழியில்ல.!

மேல சொல்லு.

அதாவது ஐயா, இரவோடு இரவா முத்தம்மாளை அங்குள்ளவர்கள் கடத்திவிட்டதாகவும், நாம தேடி வந்திருப்பதாகவும் காட்டிக்கொள்ள வேண்டும். எது நடந்தாலும் கூவங்குளத்தோட முடியணும். அங்கிருந்து ஒருத்தரையும்



**தொடர்வாள் முத்தம்மாள்.**

நம்ம ஊருக்குள்ள வரவிடக் கூடாது. வந்தா நமக்கும் நம்ம குழந்தைகளுக்கும் பெரிய ஆபத்துன்னு உங்களுக்குத் தெரியாதது இல்ல என்றான்.

இல்ல... இல்ல... அதுசரியில்ல. அது இன்னும் பெரிய பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும் என்றார் உவாக்கர். அவர்களே இங்கு வரட்டும். எதுவானாலும் பேசிக் கொள்வோம். நான் நம்பித்தலைவன் பட்டயத்தில் இருக்கும் எனது நண்பரான ஜமீன்தார் சுப்பிரமணியன் அவர்களுக்கு தகவல் சொல்லியிருக்கிறேன். அவர் இன்னும் சற்று நேரத்தில் இங்கு வருவதாக சொல்லியிருக்கிறார்.

பண்ணையார்கள் ஜமீன்தார்கள் பேச்சை எளிதில் தட்டிவிடமாட்டார்கள். அவரை வைத்துப் பேசுவோம். நீங்கள் எல்லோரும் இங்கு எங்களோடு இருக்க வேண்டும் என்றார் பவ்யமாக.

சரிங்க ஐயா. உங்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் அது எங்கள் வீட்டுப் பிரச்சனை. ஆனால் உங்களை மீறி நாங்க எதுவும் செய்ய மாட்டோம்.

மகிழ்ச்சி, நல்லது நண்பர்களே, என்றவர் அது யார்.? வெளிவாசலில் ஒரு பெண்....நமது ஊரா? இங்கே இதுவரை அவளை பார்த்த மாதிரி இல்லையே.! இங்கு தான் அந்தப் பெண் வந்து கொண்டிருக்கிறாள். ஏமி வெளியே எட்டிப் பார்க்கவும் அந்த இளம்பெண் ஏமியை பார்த்துக் கையை அசைத்து அழைத்தாள். வேகமாக நடந்து சென்றார் ஏமி. அருகில் சென்றதும் அந்தப் பெண்ணின் தோள்மீது கைப்போட்டு அணைத்தபடி அவளோடு எதையோ பேசியபடியே அழைத்துக் கொண்டு வந்தார்.

ஐயா, இந்தப் பெண்ணிற்கு முத்தம்மா ஊரான கூவங்குளம். இவளுக்கு நம்ம ஊரில் சொந்தக்காரங்க இருக்காங்க. என்றான் ராமசாமி.

உவாக்கரைத் தவிர மற்ற ஆண்கள் அனைவரும் வெளியில் சென்றனர். அந்தப் பெண் நடுத்தர வயதில் இருந்தாள். சேலையால் முக்காடு போட்டிருந்தாள். மிகக் குறைந்த அளவுதான் முகம் தெரிந்தது. மெலிந்த தேகத்தோடிருந்த அவள் முகம் அசதியாகி களைத்திருந்தது.

உட்காருமா இதில் என்று நாற்காலியை காட்டினார் ஏமி. அவள் தரையில் அமர்ந்து கொண்டாள். பர்தா டீ போட சென்றாள். அவள், எனக்கு கொஞ்சம் உப்புப் போட்டு நீர்தண்ணி வேணும் என்றாள். பர்தா பெரிய செம்பில் மோர் கொண்டுவந்து கொடுத்து விட்டு நிதானமானாள். தலையிலிருந்து துணியை விலக்கிய அந்தப் பெண், அழ ஆரம்பித்தாள்.

அழாதம்மா என்ற ஏமி முத்தம்மாளின் தாய் தான் இவளை இங்கே நம்மிடம் அனுப்பியிருக்கிறாள் என்றார்.

அப்படியா... அழாமல் சொல்லுமா. என்ன நடந்தது என்றார் உவாக்கர்.

ஐயா, என் பேரு வெள்ளயம்மா. முத்தமாளுக்கு ஒன்றுவிட்ட அத்தை. முத்தம்மாளை அந்தப்பாவிப் பயல் சித்தப்பக்காரன், பண்ணையாரின் மகனுக்கு கல்யாணம் முடுச்சி கொடுக்கப் போவதா முதல்ல சொல்லியிருந்தான். அதனால தான் அவள் தாய்க்காரியும் அதுக்கு சம்மதித்திருந்தாள். அவளும் பணப்பேய் பிடித்தவள் தான். இருந்தாலும் பெத்தவயிரு பாத்திங்களா...குலுங்கி குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

சரி, சரி.. அழாம மேல்கொண்டு சொல்லு வெள்ளையம்மா.... என்றார் அவள் கண்ணீரை துடைத்து விட்டபடியே, ஏமி. ஆனா, அந்த பண்ணையாருதான் முத்தம்மாளை தனக்கு பொண்டாட்டியா கெட்டி கேட்டிருக்கான். முத்தம்மா நாளைக்கு எங்க ஊருக்கு வந்து சேர்ந்த உடனயே கண்ணாளமுன்னு நேத்து சாயங்காலம் தான் அவள் சித்தப்பன் வந்து சொல்லியிருக்கான். அதுக்கு எந்த தாய் ஐயா சம்மதிப்பா, நீங்களே சொல்லுங்க? அந்தப் பண்ணையார் பயலுக்கு ஏற்கெனவே மூணு பொண்டாட்டியும்.... ஊரெல்லாம் வெப்பாட்டியும் இருக்காளுக. இப்ப முத்தம்மாளை நாலாவதா தாரமாக்க துடிக்கிறானாம். மானங்கெட்ட அந்தப்பய... மொதல்ல முத்தம்மாவுடைய அம்மகாரியையே வளச்சிப் போட அலைஞ்சவன்யா. ஆனா முத்தம்மா தாய்க்காரிய அந்தமாதிரி விசயத்தில குறை சொல்ல முடியாதுங்க. அவள் அதுக்கெல்லாம் சம்மதிக்கல்ல. நேத்து ராத்திரி அழுதுகிட்டே அவள் எங்கூட்டுக்கு வந்து, நீ டோனாவூருக்கு போய் முத்தம்மாளை அங்கேயே வச்சிருக்க சொல்லு. யார் வந்து கேட்டாலும் விடக்கூடாதுன்னு சொல்லிட்டு வான்னு சொல்லி என்னை இங்க அனுப்பினா.

கூவங்குளத்திலிருந்து என்னை கெட்டிக் குடுத்த ஊரு செவலகாட்டுபுதூர். அங்கிருந்து எங்க ஊருக்கு ஏழு மைல் தூரமுங்க. ராவோட ராவா நடந்து சாமத்துல எங்க வீட்டுக்கு வந்து ஒரே அழுவைங்க... நான் உடனே என் புருசனோட கிளம்பி நடந்து, இங்க வந்து சேர இவ்ளவு நேரமாயிருக்கு.

உன் கணவர் எங்கே...வெளியில் எட்டிப் பார்த்தார் உவாக்கர்.

அவியள நான் ஊருக்கு வெளிய இருக்கிற இசக்கியம்மன் கோயிலுகிட்ட நிக்க சொல்லிட்டு வந்தேன். நாங்க இங்க வந்த விசயத்தை யாராவது பார்த்துட்டா.... அந்தப் பண்ணையார் பயலுவ லேசுபட்டவன் இல்லைங்க என்றவள், ஏமியின் காலை தொட்டு கைக்கூப்பி எங்க புள்ளைய காப்பாத்து தாயீ... என்று விம்மி விம்மி அழுதாள்.

ஏமி அவள் கூப்பிய கையைப் பற்றிப் பிடித்து.... கவலையை விடுமா. நாங்கள் பத்திரமா முத்தம்மாளை பார்த்துக் கொள்கிறோம். அவளுக்கு நாங்கள் பொறுப்பு. அவள் தாயின் அனுமதி இல்லாமல் யாரும் அவளை கல்யாணம் செய்யவே முடியாது.

இனி உள்ள விசயங்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், என்ற ஏமி அவள் கண்ணீரைத் துடைத்து விட்டாள். மாங்கி எரிந்த இதயங்கள் பொங்கிப் பூரித்தன...

**தொடரும் வசந்தம்.**

## திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்கள்.

பூர்வ நாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைச் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான், உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள். உபாகமம் 32.7

ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருச்சபை உருவாகி சுமார் இரண்டரை நூற்றாண்டுகளாகின்றன. பராபரனின் பெரிதான கிருபையினால் இன்று திருமண்டலங்களாகவும், பல நூறு திருச்சபைகளாகவும் பெருகிவந்து கொண்டு இருக்கின்றது. பராபரனுக்கு ஸ்தோத்திரம். திருச்சபை சரித்திரத்தை அறிய வேண்டிய அவாவும் மக்கள் மனதில் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் **'யார் நமது காரியமாய் போவான்,' இதோ அடியேன் இருந்கின்றேன், என்னை அனுப்பும்'** என்று ஏசாயா தீர்க்கன் முன் வந்தது போல திருநெல்வேலி வரலாற்றை மீள் பதிப்பு செய்யவும், வரலாற்று பணிகளை கள ஆய்வுப் மேற்கொள்ளவும், நின்றுபோன வரலாற்று **'தொடரோட்டத்தை தொடரவும்'** கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இயக்கமே **'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'**

திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்கள் பலரின் அரும்பெரும் முயற்சியினால் தொடங்கப்பட்டது. நம்முடைய வரலாற்றுச் சங்கத்தின் தரிசனத்தில், இறையியல் கல்லூரி மாணவர்கள் பலர் தன்னார்வத்தோடு தங்களையும் இணைத்து செயல்பட்டு வருகிறார்கள். மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள பல வரலாற்று ஆய்வாளர்களுடன் கைகோர்த்து இப்பணியைச் செய்து வருகின்றோம்.

வரலாற்றுச் சங்கமானது கடந்த மூன்று ஆண்டுகளாக உங்களுடைய ஜெபத்தினாலும் பேராதரவினாலும், மிகச்சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. நமது பத்து அம்ச திட்டங்களில் மாத ஆய்விதழ், பழைய புத்தகங்கள் சேகரித்தல் மற்றும் டிஜிட்டல் செய்யும் பணி, புத்தக மறுப்பதிப்பு பணிகள், நூலகப் பணிகள், மிஷன் சுற்றுப்பயணம், புத்தக வனம் இணைய செயலி, ஆவணப்படம் தயாரித்தல், மிஷன் அருங்காட்சியகம், ஆய்வுக் கருத்தரங்கம் போன்ற பணிகளை கடந்த ஆண்டுகளில் செய்து வருகின்றதை நீங்கள் அறிந்ததே.

இந்த ஆண்டிலும் வரும் ஆண்டுகளிலும் நமது இலக்குகளை அதிகப்படுத்தி இருக்கின்றோம். குறிப்பாக **புத்தக மறுப்பதிப்பு, நூலகப் கட்டிட பணிகள், மிஷன் அருங்காட்சியகம்** மேற்கண்ட பணிகளை செய்ய வேண்டிய தேவையில் இருக்கின்றோம். இப்பணிகளில் நீங்கள் குடும்பமாகவோ, இயக்கமாகவோ அல்லது தனிநபராகவோ இணைந்து செயல்படவும் பங்கு பெறவும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நம் சங்கத்தின் பத்து அம்ச செயல்திட்டத்தை நினைவுபடுத்துகின்றோம்:-**

தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் நீண்ட இடைவெளிக்கு பின்பு மீண்டும் ஒரு வரலாறு படைத்துக் கொண்டு இருக்கும் மாத ஆய்விதழ் தான் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'**. கடந்த 2020ம் ஆண்டு ஜுன் மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தலைப்பைக் கொண்டு பல்வேறு அரிய ஆய்வுக் கட்டுரைகளோடு மிக சிறப்பாக வெளி வந்து கொண்டிருக்கிறது. **மறைக்கப்பட்ட, மறந்த, மறைந்த** மிஷனெரிகள் மற்றும் திருச்சபை வரலாறுகள், கள ஆய்வுகள், பல்வேறு அரிய வரலாற்று பொக்கிஷங்களுடன் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 1600 க்கு மேற்பட்ட வாசகர்களுடன் வந்து கொண்டு இருக்கின்றது.

- காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோர்த்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவருடைய அளப்பரிய செயல்களை நினைவுகூறும் வகையில் **ஆபிரகாம் பண்டிதர் நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்** நம்முடைய சங்கத்தின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் **முதல் நூலகம்** என்ற சிறப்பைப் பெற்றது. இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும். மேலும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் இது உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.
- வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, மறுபதிப்பு செய்து வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு புத்தகங்களை மறுபதிப்பு செய்து வருகின்றோம். குறிப்பாக நெல்லை திருமண்டல வரலாற்று அறிஞர் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களுடைய படைப்புகளை மறுபதிப்பு செய்து இன்றைய தலைமுறைகளுக்கு கொண்டு செல்லவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம். குறிப்பாக கடந்த ஆண்டு பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் அவர்களின் வரலாற்று சிறப்புமிக்க புத்தகம் அனைத்தையும் மறுபதிப்பு செய்து வருகின்றோம்.

- நம்முடைய வரலாற்று சங்கமும் கிறிஸ்தவ ஆய்வு மற்றும் ஆவணப்படுத்து மையமும் இணைந்து **'புத்தக வனம்'** செயலி செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது. இந்த செயலி தமிழகத்தில் முதல் முறையாக டிஜிட்டல் முறையில் கையடக்க வடிவில் புத்தகமாக முழு நூலகமாக உங்கள் கைகளில் கொடுத்துள்ளோம். இன்னும் பல ஆயிரம் புத்தகங்களை பதிவேற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் பெயரிலேயே **நினைவு புத்தக அங்காடி** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழக வரலாற்றில் கிறிஸ்தவ மிஷனெரிகளுடைய பங்கு குறிப்பிடத்தக்கது. அந்த மிஷனெரிகள் பணி செய்த இடங்கள், அவர்களுடைய நினைவிடங்கள், தங்கியிருந்த இல்லங்கள், கல்லறைகள், வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள், இரத்த சாட்சிகளாக மரித்த மிஷனெரிகள் பணி செய்த மற்றும் தங்களை இரத்த சாட்சியாக ஒப்புக்கொடுத்த இடங்களை தெளிவான முறையில் பார்வையிடவும், வெளியிடங்களிலிருந்து வரும் மக்களின் வசதிக்காகவும் **Mission Tourist Map** என்று செயலி உருவாக்கி அதன் மூலம் அவர்கள் தங்குமிடங்கள், வழித்தடங்கள் அடங்கிய மின்னியல் கையேடு அமைப்பது.
- வரலாற்றின் பக்கங்களில் மறைந்து கிடக்கும் கீர்த்தனை கவிஞர்கள், உபதேசிமார்கள், முன்னாள் குருமார்களுடைய வரலாற்று பொக்கிஷங்களை சேகரித்து வருகிறோம். மேலும் அவர்களுடைய வரலாற்றுத் தகவல்கள், அவர்களால் உருவாக்கப்பட்ட திருச்சபைகள், கிறிஸ்தவ பாடல்கள் உருவாக்கம் பெற்ற வரலாறுகள், பாடல்களின் வரலாறுகளையும் சேகரித்து அதை மின்னியல் முறைக்கு மாற்றும் பணிகளையும் செய்து கொண்டு இருக்கின்றோம்.
- தமிழ் கிறிஸ்தவ பழைய புத்தகங்களை சேகரித்து மின்னியல் முறையில் ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகத்திலும், பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் நினைவு புத்தக அங்காடியிலும் பதிவேற்றம் செய்வதுடன் புத்தகங்களை தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக ஒரு சிறந்த ஆய்வு நூலகம் அமைக்கவும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறோம்.
- மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாற்று சம்பவங்களை அடிப்படையாக கொண்டு ஆவணப்படங்களை வெளியிடுவதற்கான முயற்சிகள் செய்து கொண்டு இருக்கிறோம். கர்த்தருக்கு சித்தமானால், வருகிற ஆண்டு ஒரு மிஷனெரியின் வரலாற்றை ஆவணப்படமாக்க திட்டமிட்டிருக்கிறோம்.
- தங்களுடைய வசதியான வாழ்வை தியாகம் செய்து நம் நாட்டிற்கு வந்து கோதுமை மணிகளாய் விதைக்கப்பட்ட மிஷனெரிகள் மற்றும் தன் சொந்த மக்களுக்காக தங்களையே அர்ப்பணித்த நம் இந்திய மிஷனரிகளின் நினைவிடங்கள் மற்றும் கல்லறைகளை கண்டறிவதுடன் திருச்சபையுடன் இணைந்து பராமரித்து அவர்களுடைய தியாகங்களை குறித்த விழிப்புணர்வை திருச்சபை மக்களுக்கு ஏற்படுத்த பணியாற்றி வருகிறோம்.
- வரலாற்றுச் சங்கம் சார்பில் மிஷனெரிகள் பயன்படுத்திய கலை பொருட்கள் மற்றும் புத்தகங்கள், பைபிள், சேகரித்து வரலாற்று **அருங்காட்சியகம்** அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். மிஷனெரிகள் பயன்படுத்திய பொருட்களை சேகரித்து வருகிறோம்.
- திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் சார்பாக வரலாற்று **ஆய்வுக் கருத்தரங்கம்** நடத்துவது வரலாற்று கள ஆய்வு பயிற்சிக்கான Workshop நடத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதற்கான ஆயத்தப்பணிகள் நடந்துகொண்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, கடந்த 2017ம் ஆண்டு அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட நம்முடைய திருநெல்வேலி **கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்** இது வரையிலும் பல்வேறு தடைகளையும், நெருக்கடிகளையும் கடந்து வந்திருக்கிறது. வரலாற்று ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், நண்பர்கள், நலன் விரும்பிகள் ஆகியோருடைய இடைவிடா ஜெபத்தாலும், ஆதரவாலும், உதவியாலும் நம் திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. மேலும் நம்முடைய மாதாந்திர ஆய்விதழும் தடைகளின்றி வெளி வருகிறது. நம்முடைய கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க செயல்பாடுகள் சிறப்பாக அமைய ஜெபத்தாலும், உடலுழைப்பாலும், பொருளாதார வழியிலும் உதவி வரும் அத்துணை நல்லுள்ளங்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். தொடர்ந்து நாம் செயல்பட வேண்டிய தளங்கள் அநேகமுண்டு. இணைந்து செயல்பட அன்புடன் அழைக்கிறோம். வரலாற்றுச் சங்கத்தின் ஓர் அங்கமாக வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கருவியாவோம். சர்வ வல்லமை கொண்ட ஆண்டவரின் ஆயுதமாவோம்.

christianhistoricalsociety.in/
tchsportal.co.in

## விரைவில்

# சாயர்புரம் திருச்சபை சரித்திரம்

**பேராசிரியர்.அருள்திரு. தே. அ. கிறிஸ்துதாஸ்**




பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் (1912-1990) அவர்கள் தென் இந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும் பாளையங்கோட்டையில் பிறந்து, வளர்ந்தவர். பள்ளி ஆசிரியர், வேதாகமக் கல்லூரி பேராசிரியர், முதல்வர், அருட்பணியாளர் மற்றும் எழுத்தாளர் என பல துறைகளிலும் ஜொலித்தவர். திருச்சபையின் வரலாறு மற்றும் திருச்சபையின் வெற்றிக்குக் காரணமான தேவ மனிதர்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இவர் எழுதிய நூல்கள் ஒரு திறவுகோல் என்றால் அது மிகையாகாது. எளிய மற்றும் வட்டார வழக்கு தமிழில் எவரும் புரிந்து கொள்ளும்படி ஆராய்ச்சி மற்றும் வரலாற்றுப் புத்தகங்களை எழுதுவது இறைவன் இவருக்குக் கொடுத்த வரம். அநேக புத்தகங்களை மட்டுமல்ல, அநேக கிறிஸ்தவ தலைவர்களையும் இவர் தன் திருப்பணி மூலமாக உருவாக்கி இருக்கின்றார்.

**'சாயர்புரம் திருச்சபை சரித்திரம்'** எனும் இந்நூல் மறைந்து கிடந்த சரித்திரங்களை கண்டெடுத்து சிறந்ததொரு ஆபரணமாக கொடுத்திருக்கின்றார் பேராசிரியர். அவருடைய படைப்புகளில் இது மிகச்சிறந்த நூலாக இருக்கும் என்பது நம்பிக்கை.

பராபரன் இந்நூலை இயற்றியவரையும், வெளியிட உதவியவர்களையும், இதனைப் படிப்பவர்களையும் ஆசீர்வதிப்பாராக.

**ஆன்லைன் ஸ்டோரில்**

Flipkart amazon

**+91 91767 80001**


Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401